# நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2026 – 2027

## மானியக் கோரிக்கை எண். 21


**ஆதவ் அர்ஜுனா**

பொதுப்பணிகள் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்



©

தமிழ்நாடு அரசு

2026

| வ.எண் | | பொருளடக்கம் | ப.எண் |
|---|---|---|---|
| **துறை** | | | |
| 1 | **முகவுரை** | | 1 |
| | 1.1 | நெடுஞ்சாலைகள் | 3 |
| | 1.2 | சிறு துறைமுகங்கள் | 9 |
| | 1.3 | நிர்வாகக் கட்டமைப்பு | 12 |
| | 1.4 | பல்வேறு அலகுகளின் செயல்பாடுகள் | 15 |
| | 1.5 | நிலைத்த வளர்ச்சி இலக்குகளுடன் ஒருங்கிணைப்பு | 25 |
| **உள்கட்டமைப்பு மேம்பாடு** | | | |
| 2 | **சாலை உள்கட்டமைப்பு மேம்பாடு** | | 29 |
| | 2.1 | 2026-27 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு- செலவுத் திட்ட ஒதுக்கீடு | 30 |
| | 2.2 | மாநில நிதியுதவி உள்கட்டமைப்புத் திட்டங்கள் | 35 |
| | | 2.2.1 ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் | 35 |

| வ.எண் | பொருளடக்கம் | | ப.எண் |
|---|---|---|---|
| | | 2.2.1.1 முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத் திட்டம் | 37 |
| | | 2.2.1.2 உயர்மட்டப் பாலங்கள் கட்டுதல் | 38 |
| | | 2.2.1.3 புறவழிச்சாலைகள் மற்றும் இணைப்புச் சாலைகள் | 40 |
| | | 2.2.1.4 நகர்ப்புறச் சாலை உள்கட்டமைப்பு | 41 |
| | | 2.2.1.5 மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கியச் சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகளில் மேம்பாட்டுப் பணிகள் | 43 |
| | | 2.2.1.6 மாவட்ட இதர சாலைகள் – சிறப்புக் கூறுத் திட்டம் | 44 |
| | | 2.2.1.7சாலை ஓடுதளப்பாதை மேம்பாட்டுத் திட்டம் | 45 |
| | | 2.2.2 சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் | 46 |
| | | 2.2.3 ஊராட்சி ஒன்றிய / ஊராட்சிச் சாலைகளை மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்துதல் | 48 |

| வ.எண் | பொருளடக்கம் | | ப.எண் |
|---|---|---|---|
| | | 2.2.4 இரயில்வே மேம்பாலங்கள்/ கீழ்ப்பாலங்கள்/ வரையறுக்கப்பட்ட பயன்பாட்டுச் சுரங்கப்பாதைகள் அமைத்தல் | 50 |
| | | 2.2.5 உயர்மட்டச் சாலை / சாலை மேம்பாலம் | 53 |
| | | 2.2.6 பராமரிப்பு மற்றும் சொத்துப் பாதுகாப்பு | 55 |
| | 2.3 | மத்திய அரசு நிதியுதவித் திட்டங்கள் | 59 |
| | 2.4 | பன்னாட்டு நிதியுதவித் திட்டங்கள் | 63 |
| | | 2.4.1 தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் – II | 64 |
| | | 2.4.2 சென்னை கன்னியாகுமரி தொழில்தடத் திட்டம் | 66 |
| | | 2.4.3 சென்னை எல்லைச் சாலை | 68 |
| | 2.5 | சிறப்பு நிறுவனங்கள் மூலம் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் | 72 |

| வ.எண் | பொருளடக்கம் | | ப.எண் |
|---|---|---|---|
| | | 2.5.1 தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் | 73 |
| | | 2.5.2 தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையம் | 77 |
| | 2.6 | கடல்சார் உள்கட்டமைப்பு மற்றும் சேவைகள் | 82 |
| | | 2.6.1 சிறு துறைமுகங்கள் மேம்பாடு | 83 |
| | | 2.6.2 துறைமுக இணைப்பு மற்றும் கடல்சார் மேம்பாட்டுத் திட்டம் | 88 |
| | | 2.6.3 பயணிகள் படகு மற்றும் கடலோர இணைப்பு | 90 |
| | | 2.6.4 தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனம் | 94 |
| | | 2.6.5 பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் லிமிடெட் | 96 |
| **நிர்வாகச் சீர்திருத்தங்கள்** | | | |
| **3** | **உள்கட்டமைப்பு நிர்வாகத்தை மேம்படுத்துதல்** | | 100 |
| | 3.1 | சாலைப் பாதுகாப்பு | 101 |
| | 3.2 | சாலைப் பராமரிப்பு | 104 |

| வ.எண் | பொருளடக்கம் | | ப.எண் |
|---|---|---|---|
| | 3.3 | சாலை, பாலம் மற்றும் நிலச் சொத்து மேலாண்மை | 106 |
| | 3.4 | தர உறுதி | 108 |
| | 3.5 | மின்னணு நிர்வாகம் | 109 |
| | 3.6 | கொள்முதல் சீர்திருத்தங்கள் | 110 |
| | 3.7 | நிறுவனத் திறன் மேம்பாடு | 111 |
| | 3.8 | உள்கட்டமைப்புத் திட்டமிடல் | 111 |
| | 3.9 | திட்டங்களைச் செயல்படுத்துதல் மற்றும் துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பு | 113 |
| | 3.10 | கடல்சார் நிர்வாகம் | 115 |
| 4 | **எதிர்காலச் செயல்திட்டம்** | | 117 |

# துறை

## 1. முகவுரை

நெடுஞ்சாலை மற்றும் துறைமுக உள்கட்டமைப்புகள், மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக மேம்பாட்டிற்கு உறுதுணையாக விளங்குகின்றன. போக்குவரத்து உள்கட்டமைப்பில் செய்யப்படும் நிலையான முதலீடு, உற்பத்தித் திறனை மேம்படுத்தவும், சரக்குப் போக்குவரத்துச் செலவைக் குறைக்கவும் மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் உதவுகிறது.

தமிழ்நாடு, இந்தியாவின் முன்னணி தொழில்மயமான மாநிலங்களில் ஒன்றாகும்; பல்வகை உற்பத்தித் துறைகள், வளர்ந்து வரும் சேவைத் துறை, விரிவான நகர்ப்புற (ம) கிராமப்புற பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் கடல்சார் வளர்ச்சிக்கான குறிப்பிடத்தக்க வாய்ப்புகளை வழங்கும் நீண்ட

கடற்கரைப் பகுதி ஆகியவற்றைக் கொண்டுள்ளது. மாநிலத்தின் தொடர் வளர்ச்சிக்கு, அதிகரித்து வரும் மக்கள் மற்றும் சரக்குப் போக்குவரத்துத் தேவைகளை பூர்த்தி செய்து, பிராந்திய வளர்ச்சியை ஊக்குவிக்கும், பாதுகாப்பான மற்றும் மீள்தன்மையுடைய போக்குவரத்துக் கட்டமைப்பு அவசியமாகும்.

போக்குவரத்து உள்கட்டமைப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து, சாலை மற்றும் துறைமுக உள்கட்டமைப்புகளின் மேம்பாடு, முறையான பராமரிப்பு மற்றும் திறமையான மேலாண்மை ஆகியவற்றிற்கு அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. அரசின் அணுகுமுறையானது அறிவியல் அடிப்படையிலான திட்டமிடல், தரமான கட்டுமானம், குறித்த காலத்தில் திட்டங்களை நிறைவேற்றுதல், சாலைப் பாதுகாப்பை மேம்படுத்துதல், தொழில்நுட்பம் சார்ந்த திறமையான நிர்வாகம் மற்றும் பொது வளங்களை விவேகத்துடன் பயன்படுத்துதல் ஆகியவற்றை வலியுறுத்துகிறது.

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, மாநில சாலைக் கட்டமைப்புகளைத் திட்டமிடுதல், மேம்படுத்துதல், தரம் உயர்த்துதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றிற்கும், சிறு துறைமுகங்கள் மற்றும் கடல்சார் போக்குவரத்தினை மேம்படுத்துதல் (ம) ஒழுங்குபடுத்துதல் ஆகியவற்றிக்கும் பொறுப்பு வகிக்கிறது. இத்துறை, மாநிலம் முழுவதும் பிராந்திய இணைப்பு, மக்களின் பாதுகாப்பான (ம) சரக்குப் போக்குவரத்து மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் போன்ற வசதிகளை மேம்படுத்துவதில் முக்கியப் பங்காற்றுகிறது.

## 1.1 நெடுஞ்சாலைகள்

தமிழ்நாட்டின் சாலைக் கட்டமைப்பு, மாநிலத்தின் மிக முக்கியமான பொது உள்கட்டமைப்புச் சொத்துகளில் ஒன்றாகும். இது நகர்ப்புற (ம) கிராமப்புற பகுதிகளைத் தொழில் மையங்கள், விவசாய உற்பத்திப் பகுதிகள், சந்தைகள், துறைமுகங்கள், விமான நிலையங்கள், கல்வி

நிறுவனங்கள், சுகாதார வசதிகள் மற்றும் சுற்றுலாத் தலங்களுடன் இணைக்கிறது. மக்களின் போக்குவரத்து வசதியை மேம்படுத்துதல், பயண நேரத்தைக் குறைத்தல், பொருளாதார நடவடிக்கைகளை எளிதாக்குதல் மற்றும் சீரான பிராந்திய வளர்ச்சியை ஊக்குவித்தல் ஆகியவற்றிற்கு இச்சாலைக் கட்டமைப்பின் தொடர்ச்சியான மேம்பாடு மற்றும் பராமரிப்பு இன்றியமையாததாகும்.

நெடுஞ்சாலைத் துறையிடம், மாநிலத்தின் சாலை உள்கட்டமைப்பின் திட்டமிடல், வடிவமைப்பு, கட்டுமானம், தரம் உயர்த்துதல், பராமரிப்பு மற்றும் மேலாண்மை ஆகிய பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதில் சாலைகள், பாலங்கள், புறவழிச் சாலைகள், உயர்மட்டச் சாலைகள், சாலை மேம்பாலங்கள், இரயில்வே மேம்பாலங்கள்/ கீழ்ப்பாலங்கள், பாதசாரிகளுக்கான வசதிகள், குறுபாலங்கள் மற்றும் அவற்றுடன்

தொடர்புடைய பிற உள்கட்டமைப்பு வசதிகள் ஆகியவை அடங்கும்.

மாநிலத்தில் உள்ள சாலைகள், அதன் இணைப்பு, வாகனங்களின் பயன்பாடு மற்றும் முக்கியத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளது. தேசிய நெடுஞ்சாலைகள் மாநிலங்களுக்கிடையே, தேசிய அளவில் இணைப்பை வழங்குகின்றன. மாநில நெடுஞ்சாலைகள் மாநிலத்திற்குள் முக்கிய சாலை இணைப்பை வழங்குகிறது. மாவட்ட முக்கியச் சாலைகள், முக்கிய உற்பத்தி மையங்கள், சந்தைகள் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளை உயர்நிலைச் சாலைகளுடன் இணைக்கின்றன. மாவட்ட இதர சாலைகள், கிராமப்புற பகுதிகளை பிற பகுதிகளுடன் இணைக்கின்றன.

நெடுஞ்சாலைகளின் வகைப்பாடு மற்றும் வழித்தட அடிப்படையிலான விவரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன:

**அட்டவணை 1.1: வகைப்பாடு வாரியாக நெடுஞ்சாலைகளின் விவரம்**

| **சாலைகளின் வகைப்பாடு** | | **நீளம் (கி.மீ)** |
|---|---|---|
| தேசிய நெடுஞ்சாலைகள் (தே.நெ.) | தேசிய நெடுஞ்சாலைகள் அலகு | 798 |
| | இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் | 6009 |
| | மொத்தம் | **6807** |
| மாநில நெடுஞ்சாலைகள் | | 12875 |
| மாவட்ட முக்கியச் சாலைகள் | | 12037 |
| மாவட்ட இதர சாலைகள் | | 45139 |
| **சாலைகளின் மொத்த நீளம் (தே.நெ தவிர)** | | **70051** |
| **சாலைகளின் மொத்த நீளம் (தே.நெ சேர்த்து)** | | **76858** |

## அட்டவணை 1.2: வழித்தட அடிப்படையிலான சாலைகளின் விவரம்

| வகைப்பாடு | ஒரு வழித்தடம் | இடை வழித்தடம் | இரு வழித்தடம் | கடின புருவங்களுடன் கூடிய இரு வழித்தடம் | நான்கு வழித்தடம் | ஆறு வழித்தடம் | எட்டுவழித்தடம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| நீளம் (கி. மீ) | | | | | | | | |
| தேசிய நெடுஞ் சாலைகள் | – | – | 879 | 2242 | 3253 | 412 | 21 | 6807 |
| மாநில நெடுஞ் சாலைகள் | 43 | 293 | 6308 | 3364 | 2589 | 278 | – | 12875 |
| மாவட்ட முக்கியச் சாலைகள் | 597 | 4183 | 6627 | 514 | 109 | 7 | – | 12037 |
| மாவட்ட இதர சாலைகள் | 34372 | 8833 | 1757 | 155 | 18 | 4 | – | 45139 |
| **மொத்தம்** | **35012** | **13309** | **15571** | **6275** | **5969** | **701** | **21** | **76858** |

தமிழ்நாடு, தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கியச் சாலைகள்

மற்றும் மாவட்ட இதர சாலைகள் உள்பட மொத்தம் 76,858 கி.மீ. நீளத்தைக் கொண்டுள்ளது. இச்சாலைக் கட்டமைப்பு, பல்வேறு போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகிறது.

ஆறுகள், நீர்நிலைகள் மற்றும் இரயில் பாதைகளைத் தடையின்றி பாதுகாப்பாக கடந்து செல்ல பாலங்கள் (ம) குறுக்கு வடிகால்கள் உதவுகின்றன. முக்கியமான பொதுச் சொத்துகளான இக்கட்டமைப்புகளுக்கு முறையான ஆய்வு, பராமரிப்பு, புனரமைப்பு மற்றும் செயல்திறன் மேம்பாடு ஆகியவை தேவைப்படுகிறது.

**அட்டவணை 1.3: நெடுஞ்சாலைகள் துறையால் பராமரிக்கப்படும் பாலங்கள் மற்றும் பிற கட்டமைப்புகள்**

| வ. எண் | பாலங்களின் வகைகள் | எண்ணிக்கைகள் |
|---|---|---|
| 1 | குறு பாலங்கள் | 139664 |
| 2 | சிறு பாலங்கள் | 8543 |

| வ. எண் | பாலங்களின் வகைகள் | எண்ணிக்கைகள் |
|---|---|---|
| 3 | பெரிய பாலங்கள் | 1047 |
| 4 | சாலை மேம்பாலங்கள் | 77 |
| 5 | இருப்புப்பாதைக் கடவுகளில் உள்ள இரயில்வே மேம்பாலங்கள் | 171 |
| 6 | இருப்புப்பாதைக் கடவுகளில் உள்ள இரயில்வே கீழ்ப்பாலங்கள் | 104 |
| 7 | பாதசாரிகள் சுரங்கப்பாதைகள் /வரையறுக்கப்பட்ட பயன்பாட்டுச் சுரங்கப்பாதைகள் | 16 |
| 8 | நடை மேம்பாலங்கள் | 11 |
| | **மொத்தம்** | **149633** |

## 1.2 சிறு துறைமுகங்கள்

தமிழ்நாடு 1,069 கி.மீ நீள கடற்கரையைக் கொண்டுள்ளது. இது கடல்சார் வர்த்தகம், கடலோரப் பொருளாதார நடவடிக்கைகள், பயணிகள்

போக்குவரத்து மற்றும் துறைமுகங்களை மையமாகக் கொண்ட வளர்ச்சிக்கான குறிப்பிடத்தக்க வாய்ப்புகளை வழங்குகிறது. மாநிலத்தில் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் மூன்று பெரிய துறைமுகங்களும் மற்றும் தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் 17 அறிவிக்கப்பட்ட சிறு துறைமுகங்களும் உள்ளன.

தமிழ்நாடு கடல்சார் வாரியம், மாநிலத்தில் உள்ள சிறு துறைமுகங்களின் நிர்வாகம், மேலாண்மை மற்றும் மேம்பாட்டிற்குப் பொறுப்பாக செயல்படுகிறது. சிறந்த நிறுவனக் கட்டமைப்பை உருவாக்குதல், தனியார் துறை பங்களிப்பு மற்றும் தொழிற்சாலை (ம) தளவாட மையங்களுடன் இணைப்பு ஆகியவற்றின் மூலம் துறைமுக உள்கட்டமைப்பு மேம்பாட்டை எளிதாக்க அரசு முற்படுகிறது.

தமிழ்நாடு கடல்சார் வாரியமானது, கடலோரக் கப்பல் போக்குவரத்து, துறைமுகங்கள் சார்ந்த

தொழிற்சாலைகள், பயணிகள் படகுச் சேவைகள், சுற்றுலா மற்றும் பிராந்திய வர்த்தகம் ஆகியவற்றை வளர்த்து, மாநிலத்தின் தொழில்துறை வளர்ச்சிக்குத் துணைபுரிகிறது. மேலும் தொழில்நுட்ப (ம) வணிகச் சாத்தியக்கூறுகள், சுற்றுச்சூழல் சார்ந்த பரிசீலனைகள், சட்டப்பூர்வத் தேவைகள் மற்றும் ஒவ்வொரு துறைமுக அமைவிடத்திற்கும் உள்ள தனித்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் மேம்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**அட்டவணை 1.4: தமிழ்நாட்டில் உள்ள துறைமுகங்கள்**

| **வகை** | **துறைமுகங்கள்** |
|---|---|
| **பெரிய துறைமுகங்கள் (மத்திய அரசு)** | சென்னை துறைமுகம்; காமராஜர் துறைமுகம் (எண்ணூர்); வ.உ.சிதம்பரனார் துறைமுகம் (தூத்துக்குடி). |

| **வகை** | **துறைமுகங்கள்** |
|---|---|
| **சிறு துறைமுகங்கள்** | |
| **அரசுத் துறைமுகங்கள்** | கடலூர்; நாகப்பட்டினம்; பாம்பன்; இராமேஸ்வரம்; கன்னியாகுமரி; குளச்சல். |
| **தனியார் முதலீட்டுத் துறைமுகங்கள்/ துறைமுக வசதிகள்** | காட்டுப்பள்ளி; எண்ணூர் சிறுதுறைமுகம் ; பனையூர்; திருச்சோபுரம்; சிலம்பிமங்கலம்; பரங்கிப்பேட்டை; பி.ஒய் 03 எண்ணெய் வளப்பகுதி (கடலூர்); வானகிரி; திருக்கடையூர்; உடன்குடி; கூடங்குளம். |

## 1.3 நிர்வாகக் கட்டமைப்பு

நெடுஞ்சாலைத் துறை, பொதுப்பணித் துறையில் இருந்து, 1946–ஆம் ஆண்டு தனித் துறையாக

உருவாக்கப்பட்டது. நெடுஞ்சாலைத் துறைக்கு என தனி அரசுச் செயலாளர் பதவி 1996–ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. பின்னர் சிறு துறைமுகங்கள் பிரிவு, நெடுஞ்சாலைத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டு, 2008–ஆம் ஆண்டில் இத்துறை நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

நெடுஞ்சாலைத்துறையில் உள்கட்டமைப்புத் திட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்த ஏதுவாக, திட்டம் (ம) வடிவமைப்பு, ஆராய்ச்சி (ம) தரஉறுதி போன்ற பல்வேறு அலகுகள், ஆணையம், நிறுவனம், வாரியம் மற்றும் கழகம் ஆகிய அமைப்புகள் உள்ளன.

நிர்வாகத் திறனை மேம்படுத்தவும், களநிலைப் பிரச்சினைகளை உன்னிப்பாகக் கண்காணித்து அவற்றிற்கு உரிய நேரத்தில் தீர்வு காணவும், கட்டுமானம் (ம) பராமரிப்பு, நபார்டு (ம) கிராமச்

சாலைகள், திட்டங்கள் மற்றும் பெருநகரம் ஆகிய செயலாக்க அலகுகள் மறுசீரமைக்கப்பட்டு, சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்ட நான்கு மண்டல கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகுகளாக உருவாக்கப்பட்டது. இந்த மறுசீரமைக்கப்பட்ட அமைப்பு 15.06.2026 முதல் செயல்பட்டு வருகிறது.

ஒருங்கிணைந்த செயலாக்கம், பொறுப்புகளை சமமாகப் பகிர்ந்தளித்தல் மற்றும் மேம்படுத்தப்பட்டப் பணி மேற்பார்வை ஆகியவற்றை எளிதாக்கும் நோக்கத்துடன் இந்த மண்டல அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. தேசிய நெடுஞ்சாலைகள், திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு, ஆராய்ச்சி, பன்னாட்டு நிதியுதவி பெறும் திட்டங்கள் மற்றும் முக்கிய சாலை வழித்தட மேம்பாடு போன்றவற்றில் சிறப்பு அலகுகள் தொடர்ந்து பங்களிப்பை வழங்குகின்றன.

**நெடுஞ்சாலைத்துறையின் பல்வேறு அலகுகள்:**

- முதன்மை இயக்குநர் அலுவலகம்
- சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய தலைமை இடங்களைக் கொண்டு செயல்படும் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகுகள்.
- தேசிய நெடுஞ்சாலைகள்
- திட்டம், வடிவமைப்பு மற்றும் ஆய்வு
- நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்
- தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–II
- சென்னை கன்னியாகுமரி தொழில்தடத் திட்டம்/ சென்னை எல்லைச் சாலை

**நிறுவனம் / ஆணையம் / வாரியம் / கழகம்**

- தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம்
- தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையம்
- தமிழ்நாடு கடல்சார் வாரியம்
- பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் லிமிடெட்

## 1.4 பல்வேறு அலகுகளின் செயல்பாடுகள்:

### 1.4.1 முதன்மை இயக்குநர் அலுவலகம்

நெடுஞ்சாலைத் துறையின் பல்வேறு அலகுகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன ஆதரவை முதன்மை இயக்குநர்

அலுவலகம் வழங்குகிறது. நிர்வாகம் தொடர்பான நடவடிக்கைகள், துறையின் அனைத்து அலகுகள் மற்றும் பிற துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு, தகவல் தொழில்நுட்ப முன்னெடுப்புகள் மற்றும் துறை முழுவதும் ஒரே மாதிரியான கொள்கை (ம) தொழில்நுட்ப வழிகாட்டுதலுக்குத் தேவைப்படும் நடவடிக்கைகள் ஆகியவற்றை இவ்வலகு மேற்கொள்கிறது.

முதன்மை இயக்குநர், பொறியாளர்கள் குழுமம், தொழில்நுட்பத் தணிக்கைக் குழு, ஒப்பந்தப்புள்ளி ஆணையம், உயர்மட்ட முரண் தீர்வுக் குழு மற்றும் திருத்திய நிர்வாக ஒப்புதலுக்கான குழு போன்ற துறை சார்ந்த குழுக்களுக்குத் தலைவராக அல்லது உறுப்பினராகச் செயல்படுகிறார். இக்குழுக்கள் தொழில்நுட்ப ஆலோசனை, ஒப்பந்தப்புள்ளி அனுமதி, ஒப்பந்த முரண்பாடுகளுக்குத் தீர்வு மற்றும் திருத்திய நிர்வாக ஒப்புதல் கருத்துருக்களுக்குப் பரிந்துரை ஆகியவற்றை வழங்குகின்றன.

### 1.4.2 கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகுகள்

இவ்வலகுகள், நெடுஞ்சாலைத் துறையின் செயலாக்கக் கட்டமைப்பின் முக்கிய அங்கமாக விளங்குகின்றன. சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டுச் செயல்படும் இவ்வலகுகள், பல்வேறு மாநில நிதியுதவி மற்றும் இதர திட்டங்களின் கீழ், சாலை (ம) பால உள்கட்டமைப்பு வசதிகளைத் திட்டமிடுதல், செயல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கியச் சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகளை மேம்படுத்துதல், தரம் உயர்த்துதல் மற்றும் பராமரித்தல்; பாலங்கள், புறவழிச்சாலைகள், சாலை மேம்பாலங்கள் மற்றும் பிற சாலை உள்கட்டமைப்புகளைக் கட்டுதல்; நகர்ப்புற (ம) கிராமப்புற இணைப்பை மேம்படுத்துதல்; சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை

செயல்படுத்துதல் மற்றும் இயற்கைப் பேரிடர்களால் பாதிக்கப்படும் உள்கட்டமைப்பைச் சீரமைத்தல் ஆகியவை இவ்வலகுகளின் செயல்பாடுகளாகும்.

### 1.4.3 தேசிய நெடுஞ்சாலைகள் அலகு

இவ்வலகு, மத்திய அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகத்தால் ஒப்படைக்கப்பட்ட தேசிய நெடுஞ்சாலைகளில் மேம்பாடு மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. தேசிய நெடுஞ்சாலைகளில் மத்திய அரசின் தரநிலைகள் (ம) நிதியளிப்பு முறைகளுக்கு ஏற்ப திட்டங்களைத் தயாரித்தல், நிலம் கையகப்படுத்துவதற்கான ஒருங்கிணைப்பு, சாலை (ம) பாலப் பணிகளை செயல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் ஆகிய பணிகளை இவ்வலகு மேற்கொள்கிறது.

### 1.4.4 திட்டம், வடிவமைப்பு மற்றும் ஆய்வு அலகு

இவ்வலகு, துறையால் மேற்கொள்ளப்படும் பாலங்கள், சாலை மேம்பாலங்கள், உயர்மட்டச் சாலைகள் மற்றும் இதர சிறப்பு கட்டமைப்புகளுக்குத் தேவையான வடிவமைப்புப் பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டுதலை வழங்குதல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறது. மேலும், இவ்வலகின் கட்டுப்பாட்டிலுள்ள பால கண்காணிப்புப் பிரிவு, மாநிலம் முழுவதும் உள்ள பாலங்கள் மற்றும் இதர கட்டமைப்புகளை சீரான கால இடைவெளிகளில் ஆய்வு செய்து; அதன் அடிப்படையில் பழுதுபார்த்தல் / புனரமைத்தலுக்கான பரிந்துரைகள் செயலாக்க அலகுகளுக்கு உரிய நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது.

### 1.4.5 நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்

இந்த நிலையமானது, ஆராய்ச்சி, கட்டுமானப் பொருட்களின் பரிசோதனை, தொழில்நுட்ப

வழிகாட்டுதல், தர நிர்ணயம் மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றின் மூலம் இத்துறைக்கு தொழில்நுட்ப மற்றும் அறிவியல் பங்களிப்பை வழங்குகிறது. சாலை உள்கட்டமைப்பின் செயல்திறன், நீடித்த உழைப்பு, பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்துவதற்கு இதன் செயல்பாடுகள் பங்களிக்கின்றன.

### 1.4.6 தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் – II

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–II என்பது, தேர்ந்தெடுக்கப்பட்ட சாலை வழித்தடங்களை மேம்படுத்துதல், நிறுவனத் திறனை வலுப்படுத்துதல் மற்றும் சாலைப் பாதுகாப்பு போன்ற பணிகளை உலக வங்கி கடனுதவியுடன் செயல்படுத்தும் ஒரு சிறப்பு அலகாகும்.

### 1.4.7 சென்னை கன்னியாகுமரி தொழில் தடத் திட்டம் / சென்னை எல்லைச் சாலை

இவ்வலகு, பன்னாட்டு நிதியுதவி பெறும் முக்கிய வழித்தட மேம்பாட்டுப் பணிகளைச்

செயல்படுத்துவதற்கும் அவற்றை ஒருங்கிணைப்பதற்கும் பொறுப்பாக உள்ளது.

சென்னை கன்னியாகுமரி தொழில் தடத் திட்டம், தொழில்துறை மையங்கள், துறைமுகங்கள், சந்தைகள் (ம) பிற பொருளாதார மையங்களுக்கான இணைப்பை வலுப்படுத்தத் தேவையான, முக்கிய கிழக்கு பொருளாதார வழித்தட சாலை இணைப்புகளை மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்கிறது.

சென்னை பெருநகரப் பகுதியின் வடக்கு, மேற்கு மற்றும் தெற்குப் பகுதிகளுக்கு இடையிலான இணைப்பை மேம்படுத்தவும், பெரிய துறைமுகங்கள், தொழிற்சாலைப் பகுதிகள் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளுடனான இணைப்பை வழங்கவும் அணுகல் கட்டுப்படுத்தப்பட்ட வழித்தடமாக சென்னை எல்லைச் சாலை மேம்படுத்தப்பட்டு வருகிறது. இந்த வழித்தடம் சரக்குப் போக்குவரத்தை

எளிதாக்குவதையும், பிராந்திய இணைப்பை மேம்படுத்துவதையும் மற்றும் நகர்ப்புற சாலைக் கட்டமைப்பிற்குள் செல்லும் நேரடிப் போக்குவரத்துச் செறிவைக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

### 1.4.8 தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம்

இந்நிறுவனம், முக்கிய சாலை உள்கட்டமைப்புத் திட்டங்களின் மேம்பாடு, செயல்பாடு மற்றும் மேலாண்மைக்கு ஆதரவு அளிக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட சுங்கச்சாலைகளை நிர்வகித்தல் மற்றும் சென்னை வெளிவட்டச் சாலை உள்ளிட்ட முக்கியத்துவம் வாய்ந்த வழித்தடத் திட்டங்களை செயல்படுத்துதல் (ம) நிர்வகித்தல் ஆகியவை இதன் பொறுப்புகளில் அடங்கும்.

### 1.4.9 தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையம்

தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலை ஆணையச் சட்டம், 2024-இன் கீழ் இந்த ஆணையம்

நிறுவப்பட்டது. இவ்வாணையம், ஒப்படைக்கப்படும் முக்கிய நெடுஞ்சாலைக் கட்டமைப்புகளை உருவாக்குதல் மற்றும் மேலாண்மை செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறது. இதில், பொது–தனியார் பங்களிப்பு முறைகள் மற்றும் பிற நிதியளிப்பு முறைகள் மூலம் முன்மொழியப்படும் திட்டங்களும் அடங்கும்.

இவ்வாணையத்திற்கு, நெடுஞ்சாலை மேம்பாடு, பராமரிப்பு (ம) திறன் மேம்பாடு, அறிவியல் அடிப்படையிலான சொத்து மேலாண்மையை ஊக்குவித்தல், புதுமையான நிதியளிப்பு முறைகளை ஆராய்தல் மற்றும் சாலைப் பயனாளர்களுக்கான வசதிகள் (ம) தொடர்புடைய உள்கட்டமைப்புகளின் வளர்ச்சியை எளிதாக்குவது ஆகியவற்றை மேற்கொள்ளும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

### 1.4.10 தமிழ்நாடு கடல்சார் வாரியம்

இவ்வாரியம் 1995–ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல்சார் வாரியச் சட்டத்தின் கீழ் மாநிலத்தில் உள்ள சிறு துறைமுகங்களை நிர்வகித்தல், மேலாண்மை மற்றும் மேம்படுத்துவதற்காக நிறுவப்பட்டது.

துறைமுக மேம்பாடு, தனியார் துறை பங்கேற்பு, துறைமுகம் சார்ந்த தொழில்துறை நடவடிக்கைகள், கடல்சார் இணைப்பு மற்றும் துறைமுக உள்கட்டமைப்பை மேம்படுத்துதல் ஆகியவற்றை அரசின் கொள்கைக் கட்டமைப்பு மற்றும் பொருத்தமான சட்டப்பூர்வத் தேவைகளுக்கு ஏற்ப வாரியம் மேற்கொள்கிறது.

### 1.4.11 பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் லிமிடெட்

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் லிமிடெட், 1974–ல் நிறுவப்பட்ட தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனமாகும். இந்நிறுவனம், மின் உற்பத்திக்கான நிலக்கரிப் போக்குவரத்து மற்றும் கன்னியாகுமரி (ம)

வட்டக்கோட்டைப் பகுதிகளில் பயணிகள் படகுச் சேவைகளை இயக்குதல் ஆகியவற்றை மேற்கொள்கிறது.

இந்நிறுவனம் கடலோரக் கப்பல் போக்குவரத்து மூலம் நிலக்கரியைக் கொண்டு செல்வதுடன் கன்னியாகுமரி கடற்கரையில் உள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களுக்குப் பயணிகள் இணைப்பையும் வழங்கி வருகிறது.

## 1.5 நிலைத்த வளர்ச்சி இலக்குகளுடன் ஒருங்கிணைப்பு

சாலை மற்றும் துறைமுக உள்கட்டமைப்பின் வளர்ச்சி மற்றும் மேம்பாடானது, நிலையான பொருளாதார வளர்ச்சி, மேம்படுத்தப்பட்ட இணைப்பு, நெகிழ்திறன்மிக்க உள்கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பான போக்குவரத்து ஆகிய நோக்கங்களுக்கு உரிய பங்களிக்கிறது.

நெடுஞ்சாலைத் துறையின் செயல்பாடுகள் கீழ்க்கண்ட இலக்குகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன:

நிலைத்த வளர்ச்சி இலக்கு 3 – சாலை விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகளையும் காயங்களையும் குறைப்பதன் மூலம் நல்ல ஆரோக்கியத்தையும் நல்வாழ்வையும் உறுதிப்படுத்துதல்.

நிலைத்த வளர்ச்சி இலக்கு 9 – தொழில்மயமாக்கல், புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் உள்கட்டமைப்புக் குறிக்கோளானது, பொருளாதார வளர்ச்சி மற்றும் மனித நல்வாழ்வை ஆதரிக்கும் வகையில் தரமான, நம்பகமான, நிலையான மற்றும் நெகிழ்திறன்மிக்க உள்கட்டமைப்பை வலியுறுத்துவதாகும்.

இந்த இலக்குகளை அடைவதற்கு, கட்டமைப்பு மேம்பாடு, சாலைத் திறன் மேம்பாடு, சாலைப் பாதுகாப்பு,

பராமரிப்பு, ஆராய்ச்சி, தர நிர்ணயம் மற்றும் நிலைத்த தொழில்நுட்பங்களைப் பின்பற்றுதல் ஆகிய துறை சார்ந்த திட்டங்கள் பங்களிக்கின்றன. மாநிலத்திற்கென நிர்ணயிக்கப்பட்ட குறியீடுகளின் முன்னேற்ற நிலை, கீழ்க்கண்ட புள்ளிவிவர அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது:

| **வ. எண்.** | **குறியீடுகள்** | **வருடம்** | | |
|---|---|---|---|---|
| | | **2015 (அடிப்படை ஆண்டு)** | **2024** | **2025** |
| 1 | 9.1.1ஆ–மொத்த மாநில நெடுஞ்சாலைகளின் நீளம் (கி.மீ.) | 12093 | 12625 | 12875 |
| 2 | 9.1.1ஆ.1–மாநில நெடுஞ்சாலைகளில் நான்கு வழித்தட சாலைகளின் நீள விகிதம் (%) | – | 18.31 | 22.27 |
| 3 | 9.1.1இ–மாவட்ட முக்கியச் சாலைகளின் நீளம் (கி.மீ.) | 11617 | 11994 | 12037 |

| வ. எண். | குறியீடுகள் | வருடம் | | |
|---|---|---|---|---|
| | | 2015 (அடிப்படை ஆண்டு) | 2024 | 2025 |
| 4 | 9.1.1இ.1–மாவட்ட முக்கியச் சாலைகளில் இருவழித்தட சாலைகளின் நீள விகிதம் (%) | 27.23 | 56.27 | 60.29 |
| 5 | 9.1.1ஈ–மாவட்ட இதர சாலைகளின் நீளம் (கி.மீ.) | 33756 | 43531 | 45139 |
| 6 | 9.1.1ஈ.1–மாவட்ட இதர சாலைகளில் உள்ள இருவழித்தட சாலைகளின் நீள விகிதம் (%) | 2.51 | 4.09 | 4.28 |
| 7 | 9.1.1ஈ.2–மாவட்ட இதர சாலைகளில் உள்ள ஒருவழித்தட சாலைகளின் நீள விகிதம் (%) | 88.01 | 77.69 | 76.15 |

# உள்கட்டமைப்பு மேம்பாடு

## 2. சாலை உள்கட்டமைப்பு மேம்பாடு

இத்துறை, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் வகையில் சாலை இணைப்பு மற்றும் சாலைப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக உள்கட்டமைப்புத் திட்டங்களை செயல்படுத்துகிறது. இத்திட்டங்களில், புதிய சாலைகள் அமைத்தல், சாலைகளை அகலப்படுத்துதல் (ம) வலுப்படுத்துதல், சாலை ஓடுதளப் பாதையை மேம்படுத்துதல், புறவழிச் சாலைகள் (ம) இணைப்புச் சாலைகள் அமைத்தல், நகர்ப்புற வழித்தடங்களை மேம்படுத்துதல், பாலங்கள் மற்றும் சாலை மேம்பாலங்கள் அமைத்தல் மற்றும் கிராமப்புற குடியிருப்புகள், தொழில் மையங்கள், துறைமுகங்கள், சந்தைகள் (ம) பிற முக்கிய இடங்களுக்கு இணைப்பை வழங்கும் சாலைகளை மேம்படுத்துதல் போன்ற பணிகள் அடங்கும்.

மாநில அரசு நிதித் திட்டங்கள், மத்திய அரசின் நிதியுதவித் திட்டங்கள், பன்னாட்டு நிதியுதவித் திட்டங்கள் மற்றும் இதர நிறுவன ஏற்பாடுகள் மூலம் உள்கட்டமைப்புப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. நடைபெற்று வரும் பணிகளை முடித்தல், சாலைச் சொத்துகளைப் பாதுகாத்தல் மற்றும் உள்கட்டமைப்பிலுள்ள தடைகளை நீக்குதல் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

### 2.1 2026–27– ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு – செலவுத் திட்ட ஒதுக்கீடு

அரசு, 2026–27–ஆம் நிதி ஆண்டில், சாலை மற்றும் பாலங்கள் மேம்பாடு மற்றும் பராமரிப்புப் பணிகளுக்காக கணிசமான திருத்த வரவு–செலவுத் திட்ட ஒதுக்கீடு செய்துள்ளது. மாநிலம் முழுவதும் போக்குவரத்து இணைப்பை வலுப்படுத்துதல், சாலைப் பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் முன்னுரிமை வாய்ந்த உள்கட்டமைப்புத் திட்டங்களைச்

செயல்படுத்துதல் ஆகியவற்றில் அரசு கொண்டுள்ள உறுதிப்பாட்டை, வரவு-செலவு ஒதுக்கீடு பிரதிபலிக்கிறது.

2026-27-ஆம் ஆண்டிற்காக, வரவு-செலவுத் திட்டத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறைக்கு மொத்தமாக ரூ.21512.87 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் மூலதனத் தலைப்பின் கீழ் ரூ.19,231.55 கோடியும், வருவாய்த் தலைப்பின் கீழ் ரூ.2280.82 கோடியும் மற்றும் கடன் தலைப்பின் கீழ் ரூ.0.50 கோடியும் அடங்கும்.

சாலை மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துதல், சாலை இணைப்பை மேம்படுத்துதல், பாலங்கள் மற்றும் சாலை மேம்பாலங்கள் கட்டுதல், பன்னாட்டு நிதியுதவித் திட்டங்கள், கிராமப்புறச் சாலைகளைத் தரம் உயர்த்துதல், சென்னை எல்லைச் சாலையை

மேம்படுத்துதல், சென்னை கன்னியாகுமரி தொழில்தடத் திட்டம், சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் பிற முன்னுரிமை உள்கட்டமைப்பு முன்னெடுப்புகளுக்காக மூலதன வரவு–செலவுத் திட்டம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. வருவாய் வரவு–செலவுத் திட்டமானது, சாலைக் கட்டமைப்பைப் பராமரித்தல், நிர்வாகம் (ம) செயல்பாட்டுத் தேவைகள் மற்றும் துறையின் திறன்மிக்க செயல்பாட்டிற்குத் தேவையான பிற செலவினம் ஆகியவற்றிற்காக ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

## 2026–27–ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு– செலவுத் திட்ட ஒதுக்கீடுகள்

| வ. எண். | திட்டங்கள்/பணிகள் | வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2026–27 (ரூ. கோடியில்) |
|---|---|---|
| **(அ)** | **மூலதன தலைப்பு** | |
| | புதுப்பிக்கப்பட்ட மத்திய சாலை நிதி | 812.00 |

| வ. எண். | திட்டங்கள்/பணிகள் | வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2026–27 (ரூ. கோடியில்) |
|---|---|---:|
| | மூலப் பணிகள் | 1.99 |
| | ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் | 9315.58 |
| | நிரந்தர வெள்ளச் சீரமைப்புப் பணிகள் | 11.61 |
| | புறவழிச்சாலைகள் அமைத்தல் மற்றும் நில எடுப்பு | 92.64 |
| | நகரப் பகுதிகளில் போக்குவரத்து மேம்பாடு | 911.79 |
| | விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான சுழல்நிதி | 20.00 |
| | இதரப் பணிகள் | 10.08 |
| | தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் | 85.54 |
| | தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் | 592.88 |
| | சென்னை எல்லைச் சாலைத் திட்டம் | 3540.00 |
| | சென்னை கன்னியாகுமரி தொழில்தடத் திட்டம் | 300.00 |
| | உயர்மட்டப் பாலங்கள் / ஆற்றுப்பாலங்கள் / புறவழிச்சாலை பணிகள் | 205.05 |
| | இரயில்வே மேம்பாலங்கள்/ கீழ்ப்பாலங்கள்/ உயர்மட்டச் சாலைகள் | 775.22 |

| வ. எண். | திட்டங்கள்/பணிகள் | வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2026–27 (ரூ. கோடியில்) |
|---|---|---|
| | தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் –II | 217.69 |
| | ஊராட்சி ஒன்றிய/ ஊராட்சிச் சாலைகளை மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்துதல் | 1285.13 |
| | நபார்டு கடனுதவித் திட்டத்தின் கீழ் உயர்மட்டப் பாலங்கள் / ஆற்றுப்பாலங்கள் | 233.49 |
| | மாநில உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி | 48.63 |
| | சேதமற்ற சாலைகள் நிதி | 250 |
| **மொத்த திட்டப் பணிகள்** | | **18709.32** |
| | **இதரப் பணிகள்** | |
| | சாலைகள் மற்றும் பாலங்கள் திட்டப் பணிகளுக்கான ஆய்வு/மதிப்பீடு | 5.00 |
| | கணக்குகளிடையே மாற்றம் | 517.23 |
| | **மூலதனத் தலைப்பு மொத்தம்** | 19231.55 |
| **(ஆ)** | **வருவாய்த் தலைப்பு** | **2280.82** |
| **(இ)** | **கடன்** | **0.50** |
| | **மொத்தம்** | **21512.87** |

## 2.2 மாநில நிதியுதவி உள்கட்டமைப்புத் திட்டங்கள்

### 2.2.1 ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டமானது, நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சாலைகளின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான ஒரு முதன்மையான மாநில அரசு நிதியுதவித் திட்டமாகும். இத்திட்டமானது போக்குவரத்துத் தேவைகள், ஓடுதளத்தின் நிலை, இணைப்புத் தேவைகள் மற்றும் சாலைப் பாதுகாப்பு அம்சங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கியச் சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகளின் திறன் மேம்பாடு, வலுப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த கட்டமைப்பை வழங்குகிறது.

இதில், சாலைகளை அகலப்படுத்துதல் (ம) வலுப்படுத்துதல், சாலை ஓடுதளப் பாதையை மேம்படுத்துதல், புறவழிச் சாலைகள், உயர்மட்டச்

சாலைகள், சாலை மேம்பாலங்கள் (ம) உயர்மட்டப் பாலங்களைக் கட்டுதல், தரைப்பாலங்களை உயர்மட்டப் பாலங்களாக மாற்றுதல், சாலைப் பாதுகாப்பு மேம்பாடுகள் மற்றும் வெள்ளம் (ம) பிற இயற்கை நிகழ்வுகளால் பாதிக்கப்படும் உள்கட்டமைப்புகளை நிரந்தரமாகச் சீரமைத்தல் ஆகிய பணிகள் அடங்கும்.

ஏப்ரல்–2026–இல், ரூ.5464 கோடி மதிப்பில் 1258 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் மற்றும் 14 பாலப் பணிகள் நிலுவைப் பணிகளாக செயலாக்கத்தில் இருந்தன. அவற்றில் 372 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் மற்றும் நான்கு பாலப் பணிகள் ரூ.1636 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் செயலாக்கத்தின் பல்வேறு நிலைகளில் உள்ளன.

இத்திட்டத்தின் முக்கியக் கூறுகள் கீழே விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன:

### 2.2.1.1 முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத் திட்டம்

போக்குவரத்து மற்றும் இணைப்புத் தேவைகளின் அடிப்படையில், முக்கிய மாநில நெடுஞ்சாலைகளை நான்கு வழித்தடச் சாலைகளாகவும் மற்றும் பிற சாலைகளை இரு வழித்தடச் சாலைகளாகவும் அகலப்படுத்துவதன் மூலம் சாலை வழித்தடங்களின் திறனை மேம்படுத்தும் நோக்கில் முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ், ரூ.2584 கோடி மதிப்பில் 494 கி.மீ. நீளமுள்ள சாலைகளை நான்கு வழித்தட தரத்திற்கும் மற்றும் ரூ.167 கோடி மதிப்பில் 77 கி.மீ. நீளமுள்ள சாலைகளை இருவழித்தட தரத்திற்கும் அகலப்படுத்தும் பணிகள் நிலுவைப் பணிகளாக செயலாக்கத்தில் இருந்தன.

அவற்றில் ரூ.151 கோடி மதிப்பில் 29 கி.மீ. நீளமுள்ள நான்கு வழித்தடச் சாலைப் பணிகளும்

மற்றும் ரூ. 137 கோடி மதிப்பில் 45 கி.மீ. நீளமுள்ள இரு வழித்தடச் சாலைப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 2.2.1.2 உயர்மட்டப் பாலங்கள் கட்டுதல்

ஆறுகள் மற்றும் நீர்நிலைகளை கடக்கத் தேவையான தடையற்ற போக்குவரத்து இணைப்பை பாலங்கள் வழங்குகின்றன. இணைப்புத் தேவைகள், நீரியல் சார்ந்த அம்சங்கள் மற்றும் பருவமழைக் காலங்களில் தற்போதுள்ள கட்டமைப்புகளின் பாதிப்புக்கு உள்ளாகும் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில், புதிய உயர்மட்டப் பாலங்கள் கட்டுதல் மற்றும் தற்போதுள்ள தரைப்பாலங்களை உயர்மட்டப் பாலங்களாக மாற்றுதல் போன்ற பணிகளைத் துறை மேற்கொண்டு வருகிறது.

**அ) தரைப்பாலங்களை உயர்மட்டப் பாலங்களாக மாற்றுதல்**

ஏப்ரல்–2026–இல், ரூ.461.38 கோடி மதிப்பில் 82 தரைப்பாலப் பணிகள் பல்வேறு திட்டங்களின் கீழ் நிலுவைப் பணிகளாக செயலாக்கத்தில் இருந்தன. அவற்றில் 14 தரைப்பாலங்கள் ரூ.70.51 கோடி மதிப்பில் உயர்மட்டப் பாலங்களாக மாற்றப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

**ஆ) இதர உயர்மட்டப் பாலங்கள் கட்டுதல்**

ஏப்ரல்–2026–இல், மாநில நிதியின் கீழ், ரூ.842.94 கோடி மதிப்பில் 24 உயர்மட்டப் பாலப்பணிகள் செயலாக்கத்தில் இருந்தன. அவற்றில் ரூ.39.34 கோடி மதிப்பில் இரண்டு உயர்மட்டப் பாலப்பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

கூடுதலாக நபார்டு கடனுதவியுடன், ரூ.129.74 கோடி மதிப்பில் ஏழு உயர்மட்டப்

பாலப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. அவற்றில், ஒரு பாலப் பணி, ரூ.26.5 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 2.2.1.3 புறவழிச்சாலைகள் மற்றும் இணைப்புச் சாலைகள்

நெரிசல் மிகுந்த நகர்ப்புறப் பகுதிகளிலிருந்து நேரடிப் போக்குவரத்தை மாற்றுப் பாதையில் அனுப்பவும், பயண நேரத்தைக் குறைக்கவும் மற்றும் நகரங்கள் (ம) மாநகரங்களுக்குள் சாலைப் பாதுகாப்பை அதிகரிக்கவும் புறவழிச்சாலைகள் அமைக்கப்படுகின்றன. இவற்றின் செயலாக்கத்தில் ஒருங்கிணைந்த திட்டமிடல், விரிவான திட்டத் தயாரிப்பு, நிலம் கையகப்படுத்துதல் மற்றும் கட்டுமானப் பணிகளை கட்டங்களாக மேற்கொள்ளுதல் ஆகியவை அடங்கும்.

35 புறவழிச்சாலைகள் ரூ.2388.89 கோடி மதிப்பில் நிலுவைப் பணிகளாக பல்வேறு

திட்டங்களின் கீழ் நடைபெற்று வருகின்றன. மேலும், ரூ.396 கோடி மதிப்பிலான மூன்று இணைப்புச் சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தற்போது, 45 புறவழிச்சாலை முன்மொழிவுகள், விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் நிலம் கையகப்படுத்துதல் உட்பட பல்வேறு நிலைகளில் உள்ளன.

போக்குவரத்துத் தேவைகள், திட்டத்தின் தயார்நிலை, போதிய நிலம் மற்றும் நிதி ஆதாரங்களின் அடிப்படையில் புறவழிச்சாலைகளின் திட்டக் கருத்துருக்களை முன்னெடுத்துச் செல்ல முன்னுரிமை வழங்கப்படும்.

### 2.2.1.4 நகர்ப்புறச் சாலை உள்கட்டமைப்பு

விரைவான நகரமயமாக்கல் மற்றும் அதிகரித்து வரும் வாகனப் போக்குவரத்திற்கு ஏற்ப சாலைத் திறன், இணைப்பு வசதி மற்றும் பாதுகாப்பை

நகர்ப்புறங்களுக்குள் மேம்படுத்துவதற்காக இலக்கு சார்ந்த நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன. இத்துறையானது தொடர்புடைய முகமைகளுடன் ஒருங்கிணைந்து, முக்கிய நகர்ப்புறச் சாலைகளை அகலப்படுத்துதல் (ம) வலுப்படுத்துதல், சாலைச் சந்திப்புகளை மேம்படுத்துதல் மற்றும் பாலங்கள், உயர்மட்டச் சாலைகள், சாலை மேம்பாலங்கள் (ம) பாதசாரிகளுக்கான வசதிகளை உருவாக்குதல் போன்ற பணிகளை மேற்கொள்கிறது.

ஏப்ரல்–2026–இல், 14 கி.மீ. நீளமுள்ள நகர்ப்புற சாலைகளில் மேம்பாட்டுப் பணிகள் ரூ.76 கோடி மதிப்பில் நிலுவைப் பணிகளாக செயலாக்கத்தில் இருந்தன. அவற்றில் 7 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் ரூ.14 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 2.2.1.5 மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கியச் சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகளில் மேம்பாட்டுப் பணிகள்

முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத் திட்டம் மற்றும் நகர்ப்புறச் சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் உட்பட, ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், சாலைக் கட்டமைப்பு மற்றும் செயல்பாட்டுத் தேவைகளின் அடிப்படையில், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கியச் சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகளில் சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு:

| வகைப்பாடு | செயலாக்கத்தில் உள்ள பணிகள் | மதிப்பு ரூ.கோடியில் | முடிக்கப்பட்ட பணிகள் |
|---|---|---|---|
| மாநில நெடுஞ்சாலைகள் | 728 கி.மீ (ம)<br>7 பாலங்கள் | 4,316 | 113 கி.மீ (ம)<br>1 பாலம் |

| வகைப்பாடு | செயலாக்கத்தில் உள்ள பணிகள் | மதிப்பு ரூ.கோடியில் | முடிக்கப்பட்ட பணிகள் |
|---|---|---|---|
| மாவட்ட முக்கியச் சாலைகள் | 137 கி.மீ (ம)<br>1 பாலம் | 335 | 67 கி.மீ (ம)<br>1 பாலம் |
| மாவட்ட இதர சாலைகள் | 283 கி.மீ (ம)<br>6 பாலங்கள் | 612 | 110 கி.மீ (ம)<br>2 பாலங்கள் |

மீதமுள்ள பணிகள் செயலாக்கத்தின் பல்வேறு நிலைகளில் உள்ளன.

### 2.2.1.6 மாவட்ட இதர சாலைகள் – சிறப்புக் கூறுத் திட்டம்

சிறப்புக் கூறுத் திட்டத்தின் கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் தொகை 40 சதவீதத்திற்கும் அதிகமாக வசிக்கும் குடியிருப்புகளுக்குச் செல்லும் சாலைகளை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இத்திட்டம் கல்வி, சுகாதாரம், சந்தைகள், வேலை

வாய்ப்புகள் மற்றும் பிற அத்தியாவசிய சேவைகளுக்கான மேம்பட்ட இணைப்பை வழங்குகிறது.

ஏப்ரல்–2026–இல், ரூ.107 கோடி மதிப்பில் 88 கி.மீ. நீளமுள்ள சாலை மேம்பாட்டுப் பணிகள் நிலுவைப் பணிகளாக செயலாக்கத்தில் இருந்தன. அவற்றில் 63 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் ரூ.89 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 2.2.1.7 சாலை ஓடுதளப்பாதை மேம்பாட்டுத் திட்டம்

சாலையின் ஓடுதளத்தைப் பாதுகாக்கவும், பாதுகாப்பான (ம) வசதியான பயணத்தை உறுதி செய்வதற்கும், காலமுறை புதுப்பித்தல் மற்றும் உரிய நேரத்தில் மேம்படுத்துதல் அவசியமாகும். இத்திட்டம், மேம்பட்ட பயண வசதி, குறைந்த வாகன இயக்கச் செலவுகள், வாகனங்களின் தேய்மானத்தைக் குறைத்தல் மற்றும் சாலை அமைப்பின்

அடித்தளத்தை பாதுகாத்தல் ஆகியவற்றிற்குப் பங்களிக்கிறது.

ஏப்ரல்–2026–இல், 22 கி.மீ. நீளத்திற்கு சாலை ஓடுதளப் பாதை மேம்பாட்டுப் பணிகள் ரூ.94 கோடி மதிப்பில் நிலுவைப் பணிகளாக செயலாக்கத்தில் இருந்தன. அவற்றில் 19 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் ரூ.84 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 2.2.2 சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்

இத்திட்டம், சென்னை பெருநகரப் பகுதிக்குள் சாலை இணைப்பை மேம்படுத்தவும், போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும், வாகனங்கள் (ம) பாதசாரிகளின் பாதுகாப்பான மற்றும் சிறந்த போக்குவரத்து வசதிக்காகவும், சாலை மற்றும் பால உள்கட்டமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு வழிவகை செய்கிறது.

இத்திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ.707.64 கோடி மதிப்பில் ஏழு பாலப் பணிகள் மற்றும் மூன்று சாலைப் பணிகள் நிலுவைப் பணிகளாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. முக்கிய பணிகள் பின்வருமாறு:

ரூ.165.22 கோடி மதிப்பில் நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம் மற்றும் சோழிங்கநல்லூர் பகுதிகளில் 6.60 கி.மீ நீளத்திற்கு கிழக்கு கடற்கரைச் சாலையை ஆறுவழித்தடமாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணி;

ரூ.208.31 கோடி மதிப்பில் இராஜகீழ்ப்பாக்கம் ஏரியின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டும் பணி; மற்றும்

ரூ.155.35 கோடி மதிப்பில் உள்வட்டச் சாலையிலுள்ள இரயில்வே மேம்பாலத்தை அகலப்படுத்தும் பணி.

இத்திட்டம் தொடர்பான நிலம் கையகப்படுத்தும் பணிகளும் ரூ.414.42 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றன.

தற்போது நடைபெற்று வரும் பணிகள், நிலம் கையகப்படுத்துதல், பயன்பாட்டுச் சாதனங்களை மாற்றி அமைத்தல் மற்றும் இதர செயலாக்கத்தைப் பாதிக்கும் சிக்கல்களைத் தீர்ப்பதில் முக்கிய கவனம் செலுத்தி, சம்பந்தப்பட்ட முகமைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 2.2.3 ஊராட்சி ஒன்றிய / ஊராட்சிச் சாலைகளை மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்துதல்

ஊரகச் சாலைகள், குடியிருப்புகள், விவசாயப் பகுதிகள், சந்தைகள், கல்வி நிறுவனங்கள், சுகாதார வசதிகள் மற்றும் உயர்நிலைச் சாலைக் கட்டமைப்பு ஆகியவற்றிற்கு இடையே அத்தியாவசியமான இணைப்பை வழங்குகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மற்றும் ஊராட்சிச் சாலைகள், அவற்றின் இணைப்பு, போக்குவரத்து

மற்றும் கட்டமைப்பு முக்கியத்துவத்தின் அடிப்படையில் தரம் உயர்த்துவதற்கு நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றப்படுகின்றன.

இத்திட்டம், தேர்ந்தெடுக்கப்பட்ட சாலைகளை மாவட்ட இதர சாலைத் தரங்களுக்கு ஏற்ப அகலப்படுத்தவும், உறுதிப்படுத்தவும் மற்றும் மேம்படுத்தவும் வழிவகை செய்கிறது. இதன்மூலம், கிராமப்புற பகுதிகளுக்கு இணைப்பு மேம்படுத்தப்பட்டு, மக்கள் மற்றும் பொருட்களின் பாதுகாப்பான மற்றும் நம்பகமான போக்குவரத்து எளிதாக்கப்படுகிறது.

ஏப்ரல்–2026–இல், 960.82 கி.மீ நீளமுள்ள சாலைகளை தரம் உயர்த்தும் பணிகள் ரூ.1016.01 கோடி மதிப்பில் நிலுவைப்பணிகளாக செயல்படுத்தப்பட்டு வந்தன. இதில் 540.73 கி.மீ நீளமுள்ள சாலைப் பணிகள் ரூ.468.76 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 2.2.4 இரயில்வே மேம்பாலங்கள்/ கீழ்ப்பாலங்கள்/ வரையறுக்கப்பட்ட பயன்பாட்டுச் சுரங்கப்பாதைகள் அமைத்தல்

அதிக போக்குவரத்து மிகுந்த வழித்தடங்களில் அமைந்துள்ள இரயில்வே இருப்புப் பாதைக் கடவுகளில், அதிகரித்து வரும் இரயில் மற்றும் வாகனப் போக்குவரத்தின் இயக்கங்களால் தாமதம், நெரிசல் மற்றும் பாதுகாப்பு தொடர்பான சிக்கல்கள் ஏற்படுகிறது. எனவே, சாலை மற்றும் இரயில் போக்குவரத்தின் பாதுகாப்பான (ம) தடையற்ற இயக்கத்தை எளிதாக்குவதற்காக இரயில்வே மேம்பாலங்கள்/ கீழ்ப்பாலங்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட பயன்பாட்டுச் சுரங்கப்பாதைகள் அமைக்கப்படுகின்றன.

#### 2.2.4.1 இரயில்வே திட்டப் பணிகள்

இரயில்வே திட்டப் பணிகளின்கீழ், தற்போதுள்ள இரயில்வே இருப்புப் பாதைக் கடவுகளுக்குப் பதிலாக இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்ப்பாலங்கள்

அமைக்கும் பணிகள் இரயில்வே அமைச்சகத்துடன் பணப் பகிர்வின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. இரயில்–வாகன அலகு, போக்குவரத்துத் தேவைகள், பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் திட்டத் தயார்நிலை ஆகியவற்றின் அடிப்படையில் இருப்புப் பாதைக் கடவுகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

ஏப்ரல்–2026–இல், ரூ.1442.14 கோடி மதிப்பில் 29 இரயில்வே மேம்பாலங்கள் / வரையறுக்கப்பட்ட பயன்பாட்டுச் சுரங்கப்பாதைகள் கட்டும் பணிகள் நிலுவைப்பணிகளாக செயல்படுத்தப்பட்டு வந்தன. இதில் ஒரு இரயில்வே மேம்பாலம் ரூ.43.83 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளது. மேலும், 33 இரயில்வே மேம்பாலங்களுக்கான முன்மொழிவுகள், விரிவான திட்ட அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் நிலம் கையகப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு கட்டங்களில் உள்ளன.

இந்தப் பணிகளைச் செயல்படுத்துவதற்கு, பொது ஏற்பாட்டு வரைபடங்களுக்கு ஒப்புதல் பெறுதல், இரயில்வே பகுதிப் பணிகளை செயல்படுத்துதல், நிலம் கையகப்படுத்துதல், பயன்பாட்டுச் சாதனங்களை மாற்றி அமைத்தல் மற்றும் அணுகுசாலைகள் அமைத்தல் ஆகியவற்றிற்கு இரயில்வே மற்றும் பிற சம்பந்தப்பட்ட முகமைகளுடன் நெருங்கிய ஒருங்கிணைப்பு தேவைப்படுகிறது. செயல்படுத்துவதில் உள்ள தடைகளைத் தீர்ப்பதற்கும் மற்றும் பணிகளை விரைவுபடுத்துவதற்கும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை துறை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

### 2.2.4.2 மாநில நிதியின் கீழ் செயல்படுத்தப்படும் பணி

ரூ.42.76 கோடி மதிப்பில் திருப்பூர் மாவட்டம் சிக்கன்னா கல்லூரி அருகே இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

### 2.2.4.3 மத்திய சாலை மற்றும் உள்கட்டமைப்பு நிதி – சேது பந்தன்

ரூ.170 கோடி மதிப்பில் திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலத்தில் கடவு எண்கள் 20 மற்றும் 1–க்கு மாற்றாக இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

### 2.2.4.4 வைப்புநிதிப் பணி

ரூ.65.98 கோடி மதிப்பில் ஆம்பூர் நகரில் பெத்லகேம் பகுதியில் ஆம்பூர் மற்றும் வாணியம்பாடி இரயில் நிலையங்களுக்கிடையில் இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

### 2.2.5 உயர்மட்டச் சாலை / சாலை மேம்பாலம்

பின்வரும் பணிகள் நிலுவைப்பணிகளாக நடைபெற்று வருகின்றன:

- சென்னை மாநகரில், தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை ரூ.621 கோடி மதிப்பில் உயர்மட்டச் சாலை;

- மவுண்ட் – பூந்தமல்லி – ஆவடி சாலையில் மியாட் மருத்துவமனை முதல் முகலிவாக்கம் வரை ரூ.314.48 கோடி மதிப்பில் நான்கு வழித்தட சாலை மேம்பாலம் – சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் (CMRL) மூலம் ஒருங்கிணைந்த பணியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது;
- i) ஆவடி சந்திப்பு, ii) குன்றத்தூர் சந்திப்பு, iii) கொரட்டூர் சந்திப்பு மற்றும் iv) வானகரம் சந்திப்பு ஆகிய 4 சாலை சந்திப்புகளில் சாலை மேம்பாலங்கள் அமைப்பதற்காக, ரூ.516.68 கோடி மதிப்பில் நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நடைபெற்று வரும் நிலுவைப்பணிகள் அனைத்தையும் விரைந்து முடிக்க தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 2.2.6 பராமரிப்பு மற்றும் சொத்துப் பாதுகாப்பு

சாலை ஓடுதளத் தன்மை, போக்குவரத்து, வகைப்பாடு, களத் தேவைகள் மற்றும் நிதி ஆதாரங்களின் அடிப்படையில் பராமரிப்பு நடவடிக்கைகள் திட்டமிடப்படுகின்றன. இவற்றில் வழக்கமான பராமரிப்பு, காலமுறை புதுப்பித்தல், சிறப்புப் பழுதுபார்ப்புகள், சேதமடைந்த சாலைப் பகுதிகளைச் சீரமைத்தல் மற்றும் பாலங்கள் (ம) இதர சாலைக் கட்டமைப்புகளின் பராமரிப்பு ஆகியவை அடங்கும்.

சாலையின் ஓடுதளத்தை பராமரிக்கவும், அதனை பாதுகாக்கவும், இத்துறை ஆண்டுதோறும் சாலையின் மேற்பரப்புகளைப் புதுப்பிக்கும் பணிகளை மேற்கொள்கிறது. சராசரியாக, ஆண்டுதோறும் சுமார் 3,300 கி.மீ. சாலைகளில் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சாலையின் நிலைமை அடிப்படையில் முன்னுரிமை அளித்தல், உரிய நேரத்தில் புதுப்பித்தல்

மற்றும் முன்கூட்டிய பராமரிப்பு ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதன் மூலம் உள்கட்டமைப்புச் சொத்துகள் அவற்றின் திட்ட–ஆயுட்காலம் முழுவதும் பாதுகாப்பாகவும் மற்றும் சேவைக்கு உகந்ததாகவும் இருக்கும்.

### 2.2.6.1 காலமுறை புதுப்பித்தல்

பராமரிப்புச் சுழற்சியில் உரிய நிலையை எட்டிய சாலைகளின் மேற்பரப்பை சீரமைப்பதற்காக, காலமுறை புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. சாலை ஓடுதளத் தன்மை, போக்குவரத்துச் செறிவு, சாலையின் முக்கியத்துவம் மற்றும் கள மதிப்பீடு ஆகியவற்றின் அடிப்படையில் புதுப்பித்தலுக்கான முன்னுரிமைகள் தீர்மானிக்கப்படுகின்றன.

இந்தத் திட்டம், சாலைக் கட்டமைப்பின் உறுதித்தன்மையைப் பாதுகாத்தல், சாலை ஓடுதளப்பாதையை மேம்படுத்துதல் மற்றும் வாகன

இயக்கச் செலவுகளைக் குறைத்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது. புதுப்பித்தல் பணிகளுக்கு முன்னுரிமை அளிப்பதற்காக, சாலைக் கட்டமைப்பு நிலைமைத் தரவுகள் மற்றும் சொத்து மேலாண்மைக் கொள்கைகளின் பயன்பாட்டை இத்துறை படிப்படியாக வலுப்படுத்தும்.

### 2.2.6.2 பாலங்கள் மற்றும் பிற கட்டமைப்புகளின் பராமரிப்பு

கட்டமைப்புகளைப் பாதுகாக்கவும் அதன் தொடர்ச்சியான பயன்பாட்டுத் திறனை உறுதி செய்வதற்காகவும், பாலங்கள், இரயில்வே மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள், சாலை மேம்பாலங்கள், உயர்மட்டச் சாலைகள் மற்றும் இதர கட்டமைப்புகளுக்கு காலமுறை ஆய்வும் உரிய காலத்தில் பராமரிப்பும் தேவைப்படுகிறது.

இக்கட்டமைப்புக்களுக்கான பராமரிப்பு, பழுதுபார்த்தல், புனரமைத்தல் மற்றும் வலுப்படுத்துதல் தொடர்பான நடவடிக்கைகள் பால கண்காணிப்பு

பிரிவின் காலமுறை ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் செயல்படுத்தப்படுகின்றன.

### 2.2.6.3 வழக்கமான பராமரிப்பு

வழக்கமான பராமரிப்பில், சாலையிலுள்ள பள்ளங்கள் (ம) குறிப்பிட்ட சில இடங்களில் ஏற்படும் சாலைச் சேதங்களைச் சரிசெய்தல், சாலைப் புருவங்கள் (ம) வடிகால் அமைப்புகளைப் பராமரித்தல், சாலை உபகரணங்களைப் பராமரித்தல், தாவரங்களை அகற்றுதல் மற்றும் சாலைகளைப் பாதுகாப்பான (ம) பயன்பாட்டிற்கு உகந்த நிலையில் பராமரிக்கத் தேவையான பிற நடவடிக்கைகள் ஆகியவை அடங்கும்.

கள அளவிலான பராமரிப்புத் தேவைகள், துறைசார் பராமரிப்புக் கட்டமைப்பு விதிகளைப் பின்பற்றி மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், உரிய நேரத்தில் கவனம் செலுத்தி சிக்கல்களைக் கண்டறிந்து, கண்காணிக்க தொழில்நுட்ப

அடிப்படையிலான அமைப்புகளும் பயன்படுத்தப் படுகின்றன.

## 2.3 மத்திய அரசு நிதியுதவித் திட்டங்கள்

தேசிய நெடுஞ்சாலைகள் ஆண்டுத் திட்டம் மற்றும் மத்திய சாலை (ம) உள்கட்டமைப்பு நிதி ஆகிய திட்டங்களின் மூலம் சாலை உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டங்கள், மாநிலத்தின் உள்கட்டமைப்பு முன்னெடுப்புகளுக்குத் துணைபுரிவதுடன், மாநிலங்களுக்கு இடையேயான மற்றும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த சாலைகள் (ம) பாலங்களை மேம்படுத்துவதையும் எளிதாக்குகிறது.

### 2.3.1 தேசிய நெடுஞ்சாலைகள் மேம்பாடு

தமிழ்நாட்டில் 6,807 கி.மீ நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலைகள் உள்ளன. இதில் 6009 கி.மீ, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 798 கி.மீ,

மாநில நெடுஞ்சாலைத் துறையின் தேசிய நெடுஞ்சாலை அலகிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகத்தின் சார்பாக, ஒப்படைக்கப்பட்ட தேசிய நெடுஞ்சாலைப் பகுதிகளில் மேம்பாடு மற்றும் பராமரிப்புப் பணிகளை தேசிய நெடுஞ்சாலை அலகு மத்திய அரசின் நிதியின் மூலம் மேற்கொள்கிறது. இப்பணிகளில், சாலைகளை அகலப்படுத்துதல் (ம) உறுதிப்படுத்துதல், புறவழிச் சாலைகள் மற்றும் பாலங்கள் கட்டுதல், சந்திப்புகளை மேம்படுத்துதல், சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் சாலைக் கட்டமைப்பின் பராமரிப்பு ஆகியவை அடங்கும்.

தேசிய நெடுஞ்சாலைகளின் ஆண்டுத் திட்டத்தின் கீழ், போக்குவரத்துத் தேவைகள், இணைப்பு வசதி, சாலைகளின் நிலைமை மற்றும் அமைச்சகத்தால் முன்னுரிமை அடிப்படையில்

ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிகள் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன. திட்டத் தயாரிப்பு, உரிய அனுமதிகள், நிலம் கையகப்படுத்துதல் மற்றும் செயல்படுத்துதல் ஆகியவற்றில் மாநில அரசு, மத்திய அரசுடன் ஒருங்கிணைந்து செயல்படுகிறது.

- இரண்டு புறவழிச்சாலைப் பணிகள் (மதுரை–அச்சம்பத்து – விராட்டிபத்து மற்றும் வேட்டவலம்) உட்பட 190.80 கி.மீ நீளமுள்ள 18 சாலைப் பணிகள் மற்றும் 14 பாலப் பணிகள் ரூ.1798.12 கோடி மதிப்பில் நிலுவைப் பணிகளாக நடைபெற்று வருகின்றன. அவற்றில் 5.95 கி.மீ நீளமுள்ள சாலைப் பணிகள் ரூ.63.36 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன.

- 2026–27–ஆம் ஆண்டில், திருவண்ணாமலை நகரத்திற்கு 22.71 கி.மீ நீளத்தில் புறவழிச்சாலை அமைக்கும் பணிக்கு ரூ.1,128.55 கோடி ஒப்புதல்

அமைச்சகத்தால் வழங்கப்பட்டு பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 2.3.2 மத்திய சாலை மற்றும் உள்கட்டமைப்பு நிதி (CRIF)

மாநிலங்களுக்கு இடையேயான இணைப்பு, பொருளாதார / முக்கியத்துவம் வாய்ந்த மாநிலச் சாலைகளை மேம்படுத்துவதற்காக மத்திய சாலை மற்றும் உள்கட்டமைப்பு நிதி மத்திய அரசால் வழங்கப்படுகிறது. இந்த நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளில் சாலைகளை அகலப்படுத்துதல் (ம) உறுதிப்படுத்துதல், பாலங்களைக் கட்டுதல் (ம) திரும்பக்கட்டுதல், சந்திப்புகளை மேம்படுத்துதல் மற்றும் சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆகியவை அடங்கும்.

ஏப்ரல்–2026–இல், ரூ. 770 கோடி மதிப்பிலான 348 கி.மீ நீளமுள்ள சாலைப் பணிகள் மற்றும் ரூ.110 கோடி மதிப்பில் 14 பாலப் பணிகளும் நிலுவைப் பணிகளாக செயல்படுத்தப்பட்டு வந்தன. அவற்றில்

36.47 கி.மீ நீளமுள்ள சாலைப் பணிகள் மற்றும் ஒரு பாலப் பணியும் ரூ.70.68 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன.

மத்திய அரசின் ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை உரிய காலத்திற்குள் முடிப்பதற்கும் மற்றும் எதிர்கால நிதி ஒதுக்கீடுகளின் கீழ் திட்ட முன்மொழிவுகளை அனுப்பவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 2.4 பன்னாட்டு நிதியுதவித் திட்டங்கள்

இத்திட்டங்கள், முக்கிய சாலை வழித்தடங்களின் மேம்பாட்டிற்கு ஆதரவளிப்பதோடு, நிறுவன அமைப்புகள், சாலைப் பாதுகாப்பு மற்றும் திட்டச் செயலாக்க நடைமுறைகளை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகளையும் வழங்குகின்றன. இத்தகைய திட்டங்களை உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி, ஜப்பான் பன்னாட்டு

கூட்டுறவு நிறுவனம், ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி மற்றும் பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகளின் சர்வதேச மேம்பாட்டு நிதி உள்ளிட்ட பலதரப்பு மற்றும் இருதரப்பு மேம்பாட்டு நிறுவனங்களின் உதவியுடன் இத்துறை செயல்படுத்துகிறது.

இந்தத் திட்டங்கள், உள்கட்டமைப்பு முதலீட்டுடன், மேம்பட்ட திட்டமிடல், சுற்றுச்சூழல் (ம) சமூகப் பாதுகாப்புகள், நிறுவனத் திறன் மேம்பாடு மற்றும் தற்காலத் திட்ட மேலாண்மை நடைமுறைகளைப் பின்பற்றுதல் ஆகியவற்றுடன் ஒருங்கிணைக்கின்றன.

### 2.4.1 தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் – II

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் – II என்பது உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் சாலைப் மேம்பாட்டுத் திட்டமாகும்.

ரூ.2,123 கோடி உலக வங்கியின் கடனுதவி உட்பட, இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ.6,567.28 கோடி ஆகும்.

இத்திட்டம்

- மாநிலம் முழுவதும் சுமார் 1,187 கி.மீ. சாலைகளை மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல்;
- நிறுவனத் திறன் மேம்பாடு மற்றும் சாலைப் பாதுகாப்பு முன்னெடுப்புகள்; மற்றும்
- தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரிய ஆதரவுடன், எதிர்கால சாலைத் திட்டங்களின் தொகுப்பிற்காக விரிவான திட்ட அறிக்கைகளைத் தயாரித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட அனைத்து சாலை மேம்பாட்டுப் பணிகளும் முடிவுற்றுள்ளன. மீதமுள்ள செயல்பாடுகள், எஞ்சிய கட்டுமானப் பணிகளை (இரண்டு இரயில்வே

மேம்பாலங்கள்) முடித்தல், பராமரிப்புப் பணிகளை நிறைவேற்றுதல் மற்றும் திட்டக் கூறுகளை முடித்தல் ஆகியவையாகும்.

### 2.4.2 சென்னை கன்னியாகுமரி தொழில்தடத் திட்டம்

மாநிலத்தின் கிழக்குப் பொருளாதார வழித்தடத்தில் சாலை இணைப்பை மேம்படுத்துவதற்காக, ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதி உதவியுடன் சென்னை கன்னியாகுமரி தொழில்தடத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டமானது, தொழில்துறை மையங்கள், துறைமுகங்கள், சந்தைகள் (ம) இதர பொருளாதார மையங்களுக்கு இடையேயான சாலை இணைப்புகளை வலுப்படுத்துவதையும், மற்றும் பயணிகள் (ம) சரக்குகளின் பாதுகாப்பான மற்றும் சிறந்த போக்குவரத்தை எளிதாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இத்திட்டமானது, அகலப்படுத்துதல் (ம) உறுதிப்படுத்துதல், புறவழிச்சாலைகள், பாலங்கள், இரயில்வே மேம்பாலங்கள், சாலை மேம்பாலங்கள், வாகன சுரங்கப்பாதைகள், பாதசாரிகளுக்கான வசதிகள் மற்றும் சாலைப் பாதுகாப்பு சார்ந்த உள்கட்டமைப்பு வசதிகளை அமைத்தல் உள்ளிட்ட முக்கியத்துவம் வாய்ந்த மாநிலச் சாலைகளை மேம்படுத்துவதை உள்ளடக்கியது.

இத்திட்டத்தின் கூறுகளில், 22 புறவழிச் சாலைகள், 12 உயர்மட்டப் பாலங்கள், ஒன்பது இரயில்வே மேம்பாலங்கள், ஒரு இரயில்வே கீழ்ப்பாலம், இரண்டு சாலை மேம்பாலங்கள், ஒரு பாதசாரிகள் சுரங்கப்பாதை, இரண்டு வாகன சுரங்கப்பாதைகள், 122 சிறிய பாலங்கள் மற்றும் 1,367 குறுபாலங்கள் ஆகிய கட்டுமானங்கள் அடங்கும். முன்னெச்சரிக்கைப் பதாகைகள், வழிகாட்டிப் பலகைகள், தெருவிளக்குகள் மற்றும் இதர சாலை உபகரணங்கள் உள்ளிட்ட சாலைப்

பாதுகாப்பு அம்சங்கள் இப்பணிகளின் முக்கிய அங்கமாக அமைகின்றன.

இத்திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட சாலை மேம்பாட்டுப் பணிகளில், 578.66 கிலோமீட்டர் நீளமுள்ள பணிகள் நிறைவு செய்யப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறக்கப்பட்டுள்ளன. நான்கு இரயில்வே மேம்பாலங்கள் மற்றும் ஒரு ஆற்றுப் பாலம் போன்ற மீதமுள்ள பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

### 2.4.3 சென்னை எல்லைச் சாலை

சென்னை எல்லைச் சாலை என்பது 133.64 கி.மீ. நீளமுள்ள பசுமை வழித்தட அணுகல் கட்டுப்பாட்டுடன் கூடிய ஆறு வழிச்சாலையாகும். இச்சாலை ரூ.17,958.39 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தச் சாலை வழித்தடம், பிராந்திய இணைப்பை மேம்படுத்தவும்,

சரக்குப் போக்குவரத்தை திறம்பட இயக்கவும் மற்றும் முக்கிய தேசிய நெடுஞ்சாலைகள், தொழிற்சாலைப் பகுதிகள் (ம) எண்ணூர் & காட்டுப்பள்ளி துறைமுகங்களுக்கு இடையே நேரடி இணைப்பை வழங்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம், நகரத்தைக் கடந்து செல்லும் நேரடிப் போக்குவரத்திற்கு மாற்றுப் பாதையை வழங்குவதோடு, சென்னையின் நகர்ப்புற சாலைக் கட்டமைப்பில் போக்குவரத்து நெரிசலைக் குறைத்து, தொழில் மற்றும் சரக்குப் போக்குவரத்து மையங்களுக்கான இணைப்பை மேம்படுத்தி, சென்னை பெருநகரப் பகுதி மற்றும் அதை ஒட்டிய மாவட்டங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வழித்தடம் கீழ்க்கண்டவாறு ஐந்து பிரிவுகளாக செயல்படுத்தப்பட்டு வருகிறது:

| பிரிவு | பகுதி | நீளம் கி.மீ–ல் | நிலை |
|---|---|---|---|
| I | எண்ணூர் துறைமுகம் முதல் தச்சூர் வரை | 25.40 | பணி நடைபெற்று வருகிறது. |
| II | தச்சூர் முதல் திருவள்ளூர் புறவழிச்சாலை வரை | 26.10 | ஒரு தொகுப்பு முடிவடைந்தது; மீதமுள்ள தொகுப்பு செயல்பாட்டில் உள்ளது. |
| III | திருவள்ளூர் புறவழிச்சாலை முதல் ஸ்ரீபெரும்புதூர் வரை | 30.10 | பணி நடைபெற்று வருகிறது. |
| IV | ஸ்ரீபெரும்புதூரிலிருந்து சிங்கப்பெருமாள் கோவில் வரை | 23.80 | தற்போதுள்ள பகுதி மாநில அரசு நிதியுதவியுடன் ஏற்கனவே கட்டமைக்கப்பட்டுள்ளது; முழுமையான அணுகல் கட்டுப்பாட்டுடன் சென்னை எல்லைச் சாலையின் தரத்திற்கு உயர்த்துவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. |

| பிரிவு | பகுதி | நீளம் கி.மீ–ல் | நிலை |
|---|---|---|---|
| V | சிங்கப்பெருமாள் கோவில் முதல் மாமல்லபுரம் அருகிலுள்ள பூஞ்சேரி சந்திப்பு வரை | 28.24 | முன்கட்டுமான– பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன. |

பிரிவுகள் I முதல் III வரையிலுள்ள பணிகள், ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதி நிறுவனம், ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி மற்றும் பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகளின் சர்வதேச மேம்பாட்டு நிதி ஆகியவற்றின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சுமார் 82 கி.மீ. நீளமுள்ள இப்பிரிவுகளில் உள்ள பணிகள், சுமார் ரூ.12,375.59 கோடி மதிப்பில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஒருங்கிணைந்த நிலம் கையகப்படுத்தலை மேற்கொள்ளவும், பன்னாட்டு நிதியுதவியை பெறுவதற்கான நடவடிக்கைகள் மற்றும் கட்டுமானத்

தொகுப்புப் பணிகளை திறம்பட நிர்வகித்தல் ஆகியவற்றை எளிதாக்கும் வகையில் இத்திட்டம் கட்டங்களாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மீதமுள்ள பகுதிகளின் பணிகள், திட்டத்தின் தயார்நிலை, சட்டப்பூர்வத் தேவைகளின் நிறைவு மற்றும் நிதி ஆதாரங்களின் அடிப்படையில் முன்னெடுத்துச் செல்லப்படும்.

## 2.5 சிறப்பு நிறுவனங்கள் மூலம் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

துறையின் சிறப்பு நிறுவனங்கள், முக்கியச் சாலை உள்கட்டமைப்பின் மேம்பாடு, செயல்பாடு மற்றும் மேலாண்மைக்கு ஆதரவளிக்கின்றன. இவை, திட்டச் செயலாக்கம், தேர்ந்தெடுக்கப்பட்ட வழித்தடங்களின் செயல்பாடு (ம) பராமரிப்பு, பொது–தனியார் பங்கேற்பு (ம) மாற்று நிதியளிப்பு மற்றும் திட்ட–வழங்கல் மாதிரிகளைப் பின்பற்றுதல் ஆகியவற்றை எளிதாக்குகின்றன.

### 2.5.1 தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் (TNRDC), தகவல் தொழில்நுட்ப அதிவிரைவுச் சாலை நிறுவனத்துடன் (ITEL) இணைந்து, தேர்ந்தெடுக்கப்பட்ட சாலை உள்கட்டமைப்புத் திட்டங்களின் மேம்பாடு, செயல்பாடு மற்றும் மேலாண்மையை மேற்கொள்கிறது.

தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம், அக்கரை முதல் மாமல்லபுரம் வரையிலான கிழக்குக் கடற்கரைச் சாலைக்கு சலுகை ஒப்பந்ததாரராகவும் மற்றும் சென்னை வெளிவட்டச் சாலையின் இயக்கம் மற்றும் பராமரிப்பிற்கு மேலாண்மை முகமையாகவும் செயல்படுகிறது. தகவல் தொழில்நுட்ப அதிவிரைவுச் சாலை நிறுவனம், மத்திய கைலாஷ் முதல் சிறுசேரி வரையிலான தகவல் தொழில்நுட்ப அதிவிரைவுச் சாலைக்கு சலுகை ஒப்பந்ததாரராக உள்ளது. மேலும் தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம், சென்னை எல்லைச் சாலையின் செயலாக்கம் (ம)

மேலாண்மையிலும் மற்றும் மதுரை சுற்றுச் சாலையின் இயக்கம் (ம) பராமரிப்புப் பணிகளிலும் ஈடுபட்டுள்ளது.

### 2.5.1.1 கிழக்குக் கடற்கரைச் சாலை

கிழக்குக் கடற்கரைச் சாலை, சென்னையை மாமல்லபுரம் மற்றும் தென் கடலோர மாவட்டங்களுடன் இணைக்கும் முக்கியமான கடலோர வழித்தடமாகும். அக்கரை–மாமல்லபுரம் பகுதி, சுங்க வசூல் வழித்தடமாக தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் மூலம் இயக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது.

இவ்வழித்தடம், தினசரி பயணிகளின் இயக்கம், சுற்றுலா, கல்வி (ம) வணிக நிறுவனங்களுக்கான இணைப்பு மற்றும் சென்னையின் தெற்கு கடலோரப் பகுதிகளில் வேகமாக வளர்ந்து வரும் இடங்களுக்கான இணைப்பு ஆகியவற்றை ஆதரிக்கிறது. வழித்தட மேலாண்மையின் ஒரு

பகுதியாக, பராமரிப்பு, சாலைப் பாதுகாப்பு மேம்பாடுகள் மற்றும் பயனாளர்களுக்கான வசதிகள் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன.

### 2.5.1.2 தகவல் தொழில்நுட்ப அதிவிரைவுச் சாலை

மத்திய கைலாஷ் முதல் சிறுசேரி வரையிலான தகவல் தொழில்நுட்ப அதிவிரைவுச் சாலையானது, தகவல் தொழில்நுட்ப அதிவிரைவுச் சாலை நிறுவனத்தால் நிர்வகிக்கப்படுகிறது. இவ்வழித்தடம், பழைய மாமல்லபுரம் சாலையில் அமைந்துள்ள முக்கிய தகவல் தொழில்நுட்ப மற்றும் அறிவுசார் நிறுவனங்களுக்கு இணைப்பை வழங்குவதுடன், ஒரு முக்கிய நகர்ப்புற பொருளாதார வழித்தடமாகவும் செயல்படுகிறது.

சாலையின் பயன்பாட்டுத் திறனை பேணுதல், போக்குவரத்து இயக்கத்தை எளிதாக்குதல் மற்றும் வழித்தட உள்கட்டமைப்பு (ம) சாலைப் பயனாளிகளின் தேவைகளை நிறைவேற்றுதல்

ஆகியவற்றில் இயக்கம் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் கவனம் செலுத்தப்படுகின்றன.

### 2.5.1.3 சென்னை வெளிவட்டச் சாலை

சென்னை வெளிவட்டச் சாலை, வண்டலூர் மற்றும் மீஞ்சூர் இடையே இணைப்பை வழங்குவதுடன், சென்னை பெருநகரப் பகுதியில் உள்ள முக்கிய ஆரச்சாலைகளை இணைக்கிறது. இவ்வழித்தடத்தின் இயக்கம் மற்றும் பராமரிப்பிற்கான மேலாண்மை முகமையாக தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் செயல்படுகிறது.

### 2.5.1.4 சென்னை எல்லைச் சாலை

தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம், சென்னை எல்லைச் சாலைத் திட்டத்தை செயல்படுத்துதல் மற்றும் நிர்வகிப்பதையும் மேற்கொள்கிறது.

### 2.5.1.5 மதுரை சுற்றுச் சாலை

மதுரை சுற்றுச் சாலை, நகரத்திற்குள் செல்லும் நேரடிப் போக்குவரத்திற்கு மாற்றுப் பாதையை வழங்குவதுடன், மதுரையைச் சுற்றியுள்ள முக்கிய ஆரச்சாலைகளுக்கிடையேயான போக்குவரத்து இயக்கத்தையும் எளிதாக்குகிறது. இவ்வழித்தடத்தின் இயக்கம் மற்றும் பராமரிப்புக்கு தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் பொறுப்பாகும்.

### 2.5.2 தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையம்

தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையம், பொது–தனியார் பங்களிப்பு மற்றும் பிற பொருத்தமான நிதியளிப்பு முறைகள் மூலம் முன்மொழியப்படும் திட்டங்கள் உட்பட, முக்கிய நெடுஞ்சாலை உள்கட்டமைப்பின் மேம்பாடு மற்றும் நிர்வாகத்தை எளிதாக்குவதற்காக நிறுவப்பட்டுள்ளது.

அரசால் ஒப்படைக்கப்படும் திட்டங்களை, அவற்றின் முக்கியத்துவம், போக்குவரத்துத் திறன்,

பொருளாதாரப் பயன்கள், தொழில்நுட்பச் சாத்தியக்கூறு மற்றும் நிதி நிலைச் சாத்தியம் ஆகியவற்றின் அடிப்படையில் இவ்வாணையம் மேற்கொள்ளும். நான்கு வழித்தடங்கள் (ம) அதிவிரைவுச் சாலைகளை அமைத்தல், முக்கிய நெடுஞ்சாலைகளின் வழித்தடத் திறனை அதிகரித்தல் மற்றும் துறைமுகங்கள், விமான நிலையங்கள், தொழிற்சாலை மையங்கள் (ம) தளவாட மையங்களுக்கான இணைப்பு வசதிகளை மேம்படுத்துதல் ஆகியவை இதன் கவனத்திற்குரிய பகுதிகளாகும்.

ஆணையம், தனியார் முதலீட்டைத் திரட்டுவதற்கும் மற்றும் நெடுஞ்சாலைச் சொத்துகளை நீண்டகாலம் நிர்வகிப்பதற்குமான தகுந்த மாதிரிகளை ஆராயும். பொது நலன், கட்டுப்படியாகும் தன்மை, இடர் (ரிஸ்க்) ஒதுக்கீடு மற்றும் பொது வளங்களின் மதிப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, விரிவான தொழில்நுட்பம், நிதி

மற்றும் சட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் திட்டக் கட்டமைப்பு மேற்கொள்ளப்படும்.

இவ்வாணையம், தனது தொடக்க நிலையில் இருப்பதால், நிறுவன மேம்பாடு, தொழில்நுட்ப மற்றும் நிதி ரீதியாகச் சாத்தியமான திட்டங்களைக் கண்டறிதல் (ம) தயாரித்தல், எதிர்காலச் செயலாக்கத்திற்கான திட்டப் பட்டியலை உருவாக்குதல் மற்றும் திட்ட மதிப்பீடு, கொள்முதல், செயல்படுத்துதல் (ம) சொத்து மேலாண்மைக்கான தகுந்த நடைமுறைகளை நிறுவுதல் ஆகிய பணிகளை தற்போது மேற்கொண்டு வருகிறது.

### 2.5.3 வைப்பு நிதிப் பணிகள்

அரசுத்துறைகள், பொது நிறுவனங்கள் மற்றும் பிற பயனாளர் அமைப்புகளின் சார்பாக கட்டுமானம் மற்றும் பராமரிப்பு மண்டலப் பிரிவுகள் சாலை (ம) பால உள்கட்டமைப்புப் பணிகளை வைப்பு நிதிப் பணிகள் என்ற அடிப்படையில் மேற்கொள்கின்றன.

இத்தகைய பணிகளுக்கான செலவினம் மற்றும் அதற்குரிய சேவைக் கட்டணங்கள், பணியை ஒப்படைக்கும் அரசுத்துறை அல்லது நிறுவனத்தால் வழங்கப்படுகிறது.

நெடுஞ்சாலைத் துறையின் தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் திட்டத்தை நிறைவேற்றும் திறன் ஆகியவற்றைப் பயன்படுத்தி பொது நிறுவனங்கள், தொழில் வளர்ச்சி, சுற்றுலா, நகர்ப்புற விரிவாக்கம் மற்றும் பிற துறைசார் முன்னெடுப்புகள் ஆகியவற்றுடன் தொடர்புடைய சாலை உள்கட்டமைப்புத் தேவைகளை செயல்படுத்த வைப்பு நிதிப் பணிகள் வழிவகுக்கின்றன.

கீழ்க்கண்ட முக்கிய வைப்பு நிதிப் பணிகள் செயலாகத்தில் உள்ளன:

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பு (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு கூடுதலாக புதிய மலைச் சாலை அமைத்தல். | 29.75 |
| 2 | தூத்துக்குடி–திருச்செந்தூர்–கன்னியாகுமரி சாலையில் கி.மீ 58/6–64/2 (மா.நெ–176) க்கு மாற்றுப் பாதை அமைத்தல் | 115.00 |

இப்பணிகள் செயலாக்கத்தின் பல்வேறு நிலைகளில் உள்ளன. மேலும், பணிகளை ஒப்படைத்துள்ள துறைகள் மற்றும் முகமைகளுடன்

ஒருங்கிணைந்து பணிகள் முன்னெடுத்துச் செல்லப்படும்.

## 2.6 கடல்சார் உள்கட்டமைப்பு மற்றும் சேவைகள்

தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதி, கடல்சார் வர்த்தகம், துறைமுகம் சார்ந்த தொழில்துறை மேம்பாடு, பயணிகள் போக்குவரத்து மற்றும் சுற்றுலா ஆகியவற்றிற்கான வாய்ப்புகளை வழங்குகிறது. சிறு துறைமுகங்களை மேம்படுத்துதல், தனியார் முதலீட்டை எளிதாக்குதல், துறைமுக இணைப்பை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்பான (ம) சாத்தியமான கடலோரப் போக்குவரத்துச் சேவைகளை மேம்படுத்துதல் ஆகியவற்றை தொடர்ந்து முன்னெடுக்க கடல்சார் துறை வலுப்படுத்தப்படும்.

தமிழ்நாடு கடல்சார் வாரியம், மாநிலத்திலுள்ள அறிவிக்கப்பட்ட 17 சிறு துறைமுகங்களை நிர்வகித்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் முறைப்படுத்துதல் ஆகியவற்றை மேற்கொண்டு

வருகிறது. தனிப்பட்ட துறைமுகப் பகுதிகளின் திறன், கப்பல் சரக்குகளின் தேவைகள், தொழில்நுட்ப மற்றும் வணிகச் சாத்தியக்கூறுகள், சுற்றுச்சூழல் சார்ந்த அம்சங்கள் மற்றும் சட்டரீதியான ஒப்புதல்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 2.6.1 சிறு துறைமுகங்கள் மேம்பாடு

சிறு துறைமுகங்கள் தொழில்துறையின் பிரத்யேகத் தேவைகள், கடலோர சரக்குப் போக்குவரத்து மற்றும் சிறப்பு கடல்சார் செயல்பாடுகளுக்கு ஆதரவு வழங்குவதன் மூலம், பெரும் துறைமுகங்களுக்கு துணைபுரிகின்றன. ஒவ்வொரு திட்டத்தின் தன்மை மற்றும் வணிக ரீதியான சாத்தியத்தின் அடிப்படையில் பொது முதலீடு, தனியார் பங்கேற்பு மற்றும் பயனாளர் தொழில்துறை முன்னெடுப்புகள் மூலம் துறைமுக உள்கட்டமைப்பை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த மேம்பாட்டு

அணுகுமுறை கீழ்க்கண்டவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது:

- சாத்தியமான சிறு துறைமுகங்களில் உள்கட்டமைப்பு மற்றும் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துதல்;
- துறைமுகம் சார்ந்த தொழில் துறைகள் மற்றும் கடலோர சரக்குப் போக்குவரத்தை எளிதாக்குதல்;
- வெளிப்படைத் தன்மை மற்றும் போட்டித் தன்மை வாய்ந்த தனியார் பங்கேற்பை ஊக்குவித்தல்;
- துறைமுக இடங்களுக்கு சாலை மற்றும் இரயில் இணைப்பை மேம்படுத்துதல்;
- சட்டப்பூர்வ மற்றும் நிர்வாகச் செயல்முறைகளை நெறிப்படுத்துதல்; மற்றும்
- கடல்சார் வளங்களை திறம்பட பயன்படுத்த உதவுதல்.

2025 – 2026– ஆம் ஆண்டில் மாநிலத் துறைமுகங்களால் 1,13,15,736 மெட்ரிக் டன் சரக்குகள் கையாளப்பட்டுள்ளன. தமிழ்நாடு கடல்சார் வாரியம், ரூ.60.92 கோடி மொத்த வருவாய் ஈட்டியுள்ளது.

**2.6.1.1 கடலூர் துறைமுகம்**

அலைத்தடுப்புகள், கப்பல் நிறுத்தும் வசதிகள் மற்றும் கப்பல் போக்குவரத்திற்கான வழித்தடங்கள் உள்ளிட்ட உள்கட்டமைப்புகளுடன் கடலூர் துறைமுகம் உருவாக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள வளங்களின் பயன்பாட்டை மேம்படுத்தவும் மற்றும் கப்பல் சரக்குப் போக்குவரத்துச் செயல்பாடுகளை எளிதாக்கவும் பொது–தனியார் பங்களிப்பு முறையில் இத்துறைமுகம் இயக்கப்பட்டு மேலும் மேம்படுத்தப்படவுள்ளது.

ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள துறைமுகத்தை இயக்கவும் மேம்படுத்துவதற்குமான சலுகை ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடலூர் பிராந்தியத்தில், சரக்குக் கையாளும் திறன், போக்குவரத்து இணைப்புத் தேவைகள், சுற்றுச்சூழல் அம்சங்கள் மற்றும் தொழில்நுட்ப (ம) நிதி சாத்தியக்கூறுகள் ஆகியவற்றின் அடிப்படையில் துறைமுகக் கட்டமைப்பை மேலும் விரிவுபடுத்துதல் மற்றும் நீண்ட கால வளர்ச்சிக்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்படும்.

### 2.6.1.2 உடன்குடி துறைமுகம்

1,320 மெகாவாட் அதிசக்தி திறன் வாய்ந்த உடன்குடி அனல் மின் திட்டத்திற்குத் தேவையான நிலக்கரியைக் கையாளுவதற்காக சுமார் 8 கி.மீ நீளமுள்ள திறந்தவெளி கடல் அணுகு தோணித்துறையை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் உருவாக்கியுள்ளது.

இத்துறைமுகத்தில் செயல்பாடுகள் தொடங்கப்பட்டுள்ளன.

இந்த துறைமுக வசதி, மின் உற்பத்தித் திட்டத்திற்கான எரிபொருள் தேவைகளை நிறைவு செய்வதோடு, முக்கிய தொழில் மற்றும் எரிசக்தித் துறை முதலீடுகளுக்கு ஆதரவளிப்பதில் பிரத்யேக துறைமுக உள்கட்டமைப்பின் பங்கை வெளிப்படுத்துகிறது.

### 2.6.1.3 இதர சிறு துறைமுகங்கள்

அறிவிக்கப்பட்ட ஏனைய சிறு துறைமுகங்கள், இயக்கம், மேம்பாடு அல்லது சட்டப்பூர்வ செயலாக்கம் என பல்வேறு நிலைகளில் உள்ளன. சரக்கு கையாளும் சாத்தியக்கூறுகள், துறைமுகங்களை பயன்படுத்தும் தொழிற்துறைகளின் தேவைகள், இணைப்புக்கான வசதிகளின் இருப்பு, சுற்றுச்சூழல் மற்றும் கடலோர- ஒழுங்குமுறைத் தேவைகள் மற்றும் வணிக ரீதியான சாத்தியக்கூறுகள்

ஆகியவற்றின் அடிப்படையில் மேம்பாட்டு முன்மொழிவுகள் பரிசீலிக்கப்படும்.

தகுந்த சட்டப்பூர்வ, சுற்றுச்சூழல் மற்றும் கடல்சார் பாதுகாப்பு விதிமுறைகளை பின்பற்றுவதை உறுதிசெய்யும் வகையில், தனியார் பங்கேற்பு மற்றும் துறைமுகம் சார்ந்த முதலீடுகளுக்கு அரசு வழி வகுக்கும்.

### 2.6.2 துறைமுக இணைப்பு மற்றும் கடல்சார் மேம்பாட்டுத் திட்டம்

துறைமுகப் பயன்பாட்டை மேம்படுத்துவதற்கும் மற்றும் சரக்குப் போக்குவரத்துச் செலவுகளைக் குறைப்பதற்கும், திறமையான சாலை மற்றும் இரயில் இணைப்புக்கான தேவைகள் அவசியமாகிறது. எனவே, எதிர்பார்க்கப்படும் சரக்குப் போக்குவரத்து இயக்கம் மற்றும் பிராந்திய வளர்ச்சித் தேவைகளின் அடிப்படையில் துறைமுக இணைப்புக்கான தேவைகள், சம்பந்தப்பட்ட உள்கட்டமைப்பு

முகமைகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டு, திட்டமிடலில் இணைக்கப்படும்.

துறைமுகங்கள், நீர்வழிப்பாதைகள், கடலோர இணைப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய கடல்சார் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான நீண்டகாலக் கட்டமைப்பை வழங்க, மாநில கடல்சார் மற்றும் நீர்வழிகள் பெருந்திட்டத்தை தமிழ்நாடு கடல்சார் வாரியம் முன்னெடுத்து வருகிறது. இதற்கான கருத்துரு, நிதியுதவிக்காக மத்திய அரசிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கடல்சார் உள்கட்டமைப்புத் தேவைகளை முறையாகக் கண்டறிவதற்கும் மற்றும் முன்னுரிமை அளிப்பதற்கும் இந்த பெரும் திட்டம் ஆதரவு அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்பெரும் திட்டத்தின் கீழ் வரும் ஒவ்வொரு பணியும், விரிவான சாத்தியக்கூறு ஆய்வுகள், சட்டப்பூர்வ ஒப்புதல்கள், நிதி இருப்பு மற்றும் அரசின் ஒப்புதல்

ஆகியவற்றின் அடிப்படையில் முன்னெடுத்துச் செல்லப்படும்.

### 2.6.3 பயணிகள் படகு மற்றும் கடலோர இணைப்பு

பயணிகள் படகுச் சேவைகள், தரை வழி இணைப்புக்கு துணைபுரியவும். சுற்றுலாவை ஊக்குவிக்கவும், தகுந்த கடலோர பகுதிகளுக்கிடையிலான அணுகலை மேம்படுத்தவும் உதவுகிறது. படகுப் போக்குவரத்துக்கு ஏற்ற காரணிகள், பயணிகளின் தேவை, பாதுகாப்புத் தேவைகள், உள்கட்டமைப்பு வசதி மற்றும் செயல்பாட்டுச் சாத்தியக்கூறு ஆகியவற்றின் அடிப்படையில் இதுபோன்ற சேவைகளை படிப்படியாக மேம்படுத்த அரசு உத்தேசித்துள்ளது.

#### 2.6.3.1 கன்னியாகுமரி படகுச் சேவை

கன்னியாகுமரி கடற்கரையில் இருந்து விவேகானந்தர் நினைவு மண்டபம் மற்றும் அய்யன் திருவள்ளுவர் சிலை வரை பயணிகள் படகுச்

சேவைகள் இயக்கப்படுகின்றன. வட்டக்கோட்டைக்கும் படகுச் சேவைகள் இயக்கப்படுகின்றன. இந்த சேவைகள், முக்கியமான சுற்றுலாத் தலங்களுக்கான அணுகலை வழங்குவதோடு, கன்னியாகுமரிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் அனுபவத்தில் குறிப்பிடத்தக்க அங்கமாக அமைகின்றன.

தமிழ்நாடு கடல்சார் வாரியம் படகுப் போக்குவரத்துகளை மேற்பார்வையிடுகிறது. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் லிமிடெட் படகுப் போக்குவரத்துச் சேவைகளை வழங்குகிறது.

பயணிகளை ஏற்றிச் செல்லும் திறனை அதிகரிக்கவும், படகுச் சேவைகளை மேம்படுத்தவும், தலா 150 பயணிகள் இருக்கை வசதி கொண்ட மூன்று புதிய பயணிகள் படகுகளை, பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் லிமிடெட் மூலம் இயக்குவதற்காக தமிழ்நாடு கடல்சார் வாரியம்

கொள்முதல் செய்து வருகிறது. படகுகளின் கட்டுமானப் பணிகள் இறுதிக் கட்டத்தில் உள்ளன. மேலும், அவை 2026–27–ஆம் ஆண்டில் ஒப்படைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய படகுகள், தற்போதுள்ள படகு வசதிகளை மாற்றியமைக்கவும் மற்றும் விரிவுபடுத்துவதற்கும் ஆதரவளிப்பதோடு, பயணிகளின் பாதுகாப்பான மற்றும் திறமையான போக்குவரத்தையும் எளிதாக்குகிறது.

### 2.6.3.2 இராமேஸ்வரம் பிராந்தியத்தில் கடலோர படகுச் சேவைகள்

அக்னிதீர்த்தம், பாம்பன் கால்வாய் மற்றும் மண்டபம் பகுதிகளில் பொருத்தமான இடங்களை உள்ளடக்கி, இராமேஸ்வரம் தீவு அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடலோரப் படகுச் சேவைகளை செயல்படுத்த அரசு முன்வந்துள்ளது.

தொழில்நுட்பச் சாத்தியக்கூறு, கப்பல் போக்குவரத்து பாதுகாப்பு, பயணிகளின் தேவை,

பொருத்தமான முனைய உள்கட்டமைப்பை வழங்குதல் மற்றும் சட்டரீதியான ஒப்புதல்களைப் பெறுதல் ஆகியவற்றிற்கு உட்பட்டு, இச்சேவைகள் படிப்படியாக மேம்படுத்தப்படும்.

'சாகர்மாலா' திட்டத்தின் கீழ், மத்திய அரசின் நிதி உதவியுடன் அக்னிதீர்த்தம் மற்றும் மண்டபத்தில் மிதக்கும் தோணித்துறைகள் அமைக்கப்பட்டு வருகிறது. சென்னையிலுள்ள இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் தொழில்நுட்ப ஆதரவுடன் தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கைகளின் அடிப்படையில் கருத்துருக்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

### 2.6.3.3 சர்வதேச படகு இணைப்பு

இராமேஸ்வரத்திற்கும் இலங்கையிலுள்ள தலைமன்னாருக்கும் இடையே பயணிகள் படகுப் போக்குவரத்துச் சேவையை தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து, மத்திய அரசு மற்றும் இதர

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து ஆய்வு செய்ய முன்மொழியப்பட்டுள்ளது.

எந்தவொரு சர்வதேச படகுச் சேவைக்கும் இருதரப்பு ஏற்பாடுகள், குடிவரவு மற்றும் சுங்க வசதிகள், கடல்சார் பாதுகாப்பு, கப்பல் போக்குவரத்துப் பாதுகாப்பு, முனைய உள்கட்டமைப்பு மற்றும் வணிகச் சாத்தியக்கூறு ஆகியவற்றின் ஒருங்கிணைந்த பரிசீலனை தேவைப்படுகிறது. எனவே, இத்திட்டம் சாத்தியக்கூறு மற்றும் தகுந்த அதிகாரிகளின் ஒப்புதல்களின் அடிப்படையில் படிப்படியாக முன்னெடுக்கப்படும்.

### 2.6.4 தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனம்

தூத்துக்குடியில் உள்ள தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனம், கடல்சார் துறையில் திறன் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்புகளுக்கு வழிவகுக்கிறது. இப்பயிற்சி நிறுவனம், ஆறு மாத கால பொது முறை தங்கிப் பயிலும் மாலுமி பயிற்சியையும்,

கப்பல் போக்குவரத்துத் தலைமை இயக்குநரகத்தால் அங்கீகரிக்கப்பட்ட இதர பயிற்சிகளையும் நடத்துகிறது.

இப்பயிற்சி நிறுவனம் 44 கட்டங்களாக 1,760 மாணவர்களுக்குப் பயிற்சி அளித்துள்ளது. தனிநபர் உயிர் காக்கும் நுட்பங்கள், அடிப்படை முதலுதவி, தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு, தனிநபர் பாதுகாப்பு மற்றும் சமூகப் பொறுப்பு, கப்பல் கலன் சரக்குச் செயல்பாடுகள் மற்றும் மாலுமிகளுக்கான பாதுகாப்புப் பயிற்சி போன்ற சிறப்புப் பயிற்சிகளையும் நடத்துகிறது.

ஒழுங்குமுறைத் தேவைகள் மற்றும் இந்திய (ம) சர்வதேச கப்பல் போக்குவரத்தில் உருவாகி வரும் வேலைவாய்ப்புகளுக்கு ஏற்ப, இப்பயிற்சி நிறுவனம் கடல்சார் திறன் மேம்பாட்டைத் தொடர்ந்து வலுப்படுத்தும்.

## 2.6.5 பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் லிமிடெட்

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் லிமிடெட், கடல்வழிப் போக்குவரத்து மற்றும் பயணிகள் படகுச் சேவைகளை மேற்கொள்கிறது. மின் உற்பத்திக்குத் தேவையான நிலக்கரியைக் கொண்டு செல்வதும் மற்றும் கன்னியாகுமரி (ம) வட்டக்கோட்டை ஆகிய இடங்களில் படகுச் சேவைகளை இயக்குவதும் இதன் முக்கியச் செயல்பாடுகளாகும்

### 2.6.5.1 நிலக்கரி எடுத்து வருதல்

வல்லூரில் அனல் மின் நிலையத்தை இயக்கி வரும் என்.டி.பி.சி. தமிழ்நாடு எனர்ஜி கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்காக, பாரதீப், தாம்ரா மற்றும் காக்கிநாடா துறைமுகங்களிலிருந்து காமராஜர் துறைமுகம் வரை நிலக்கரியை கொண்டு வருவதற்கான போக்குவரத்து ஏற்பாடுகளை பூம்புகார்

கப்பல் போக்குவரத்துக் கழகம் லிமிடெட், கப்பல்கள் மூலம் மேற்கொண்டு வருகிறது. அதற்கு சேவைக் கட்டணமாக கப்பல் வாடகையில் ஐந்து சதவீதம் வசூலிக்கப்படுகிறது. நிலக்கரி ஒதுக்கீடு மற்றும் மின் உற்பத்தி நிறுவனத்தின் செயல்பாட்டுத் தேவைகளுக்கு ஏற்ப கொண்டு செல்லப்படும் நிலக்கரியின் அளவானது மாறுபடும்.

கடந்த மூன்று ஆண்டுகளில் கொண்டு செல்லப்பட்ட நிலக்கரியின் அளவு பின்வருமாறு:

| **வருடம்** | **கொண்டு செல்லப்பட்ட அளவு (மெட்ரிக் டன்)** |
|---|---|
| 2023–24 | 56.25 லட்சம் |
| 2024–25 | 65.54 லட்சம் |
| 2025–26 | 63.39 லட்சம் |

மின்துறையின் தேவைகளின் அடிப்படையில், சரியான நேரத்தில் போக்குவரத்துச் சேவையை பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் லிமிடெட்

தொடர்ந்து மேற்கொள்ளும். பொருத்தமான சரக்குகளை இதர துறைமுகங்களுக்கு கொண்டு செல்வதற்குத் திரும்பும் பயணங்களை பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் ஆலோசித்து மேற்கொள்ளப்படவுள்ளது.

**2.6.5.2 பயணிகள் படகுச் சேவை இயக்கம்**

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் லிமிடெட், கன்னியாகுமரியிலிருந்து விவேகானந்தர் பாறை நினைவிடம், அய்யன் திருவள்ளுவர் சிலை மற்றும் வட்டக்கோட்டை ஆகிய இடங்களுக்கு பயணிகள் படகுச் சேவைகளை இயக்கி வருகிறது. தற்போது ஐந்து படகுகள் பயன்பாட்டில் உள்ளது.

2025-26-ஆம் ஆண்டில், படகுச் சேவைகள் மூலம் 30.20 இலட்சம் பயணிகளை ஏற்றிச் சென்று, ரூ.45.19 கோடி மொத்த வருவாய் ஈட்டப்பட்டது.

இக்கழகம், பாதுகாப்பான மற்றும் நம்பகமான படகுச் சேவைகள், மேம்பட்ட பயணிகள் வசதிகள் மற்றும் தற்போதுள்ள ஐந்து படகுகள் மற்றும் கட்டுமான நிலையில் உள்ள மூன்று புதிய படகுகளையும் திறமையாக பயன்படுத்திட உள்ளது, மேலும், பயணிகளின் வசதிக்காக இணைய வழி பயணச்சீட்டு, QR குறியீடு சரிபார்த்தல் மூலம் வருவாய் மேம்படுத்தப்படும்.

# நிர்வாகச் சீர்திருத்தங்கள்

## 3. உள்கட்டமைப்பு நிர்வாகத்தை மேம்படுத்துதல்

அரசு, உள்கட்டமைப்பு வசதிகளில் முதலீடு செய்வதுடன், திட்டமிடல், திட்டங்களைச் செயல்படுத்துதல், தரத்தை உறுதி செய்தல், பராமரித்தல் மற்றும் பாதுகாத்தல் ஆகியவற்றிற்கான நிறுவன, தொழில்நுட்ப மற்றும் மின்னணு அமைப்புகளை வலுப்படுத்துவதற்கும் முன்னுரிமை அளிக்கிறது.

இச்சீர்திருத்தங்கள், பாதுகாப்பான சாலைகள், மேம்பட்ட பராமரிப்பு (ம) சொத்து மேலாண்மை, தர உறுதி, மின்னணு திட்டக் கண்காணிப்பு, வெளிப்படையான கொள்முதல், தொழில்முறைத் திறன் மற்றும் பொறுப்புணர்வுள்ள பொதுச் சேவைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்துகின்றன.

தொழில்நுட்பத் தேவைகள், தயார்நிலை மற்றும் வளங்களின் இருப்பு ஆகியவற்றின் அடிப்படையில், வரையறுக்கப்பட்ட செயல் திட்டங்கள், முகமைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பு மற்றும் காலமுறை ஆய்வு ஆகியவற்றின் மூலம் இச்சீர்திருத்தங்கள் செயல்படுத்தப்படும்.

### 3.1 சாலைப் பாதுகாப்பு

சாலைப் பாதுகாப்பு என்பது சாலைத் திட்டமிடல், வடிவமைப்பு, கட்டுமானம், செயல்பாடு மற்றும் பராமரிப்பு ஆகியவற்றின் ஒருங்கிணைந்த கூறாகும். வாகன எண்ணிக்கையில் ஏற்படும் விரைவான வளர்ச்சி, அதிகரித்து வரும் சரக்குப் போக்குவரத்து, நகர்ப்புற விரிவாக்கம் மற்றும் பன்முகப் போக்குவரத்து நிலைமைகள் ஆகியவை சாலைப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த அணுகுமுறையை அவசியமாக்குகின்றன.

2025–ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் சுமார் 71,000 சாலை விபத்துகளும் அதில் சுமார் 18,000 உயிரிழப்புகளும் பதிவாகியுள்ளன. 2026–ஆம் ஆண்டில், ஜூலை மாதம் வரை 39,716 விபத்துகளும் 10,309 உயிரிழப்புகளும் பதிவாகியுள்ளன. இப்புள்ளிவிவரங்கள், சம்பந்தப்பட்ட அனைவரது ஒருங்கிணைந்த முயற்சியுடன் சாலை விபத்துகளையும் மற்றும் உயிரிழப்புகளையும் குறைப்பதற்கான நிலையான நடவடிக்கைகள் அவசியம் என்பதை சுட்டிக்காட்டுகின்றன.

விபத்துகள் நிகழும் இடங்களைக் கண்டறிந்து, விபத்துக்கான காரணங்களை அறிவியல் முறையில் ஆய்வு செய்து, விபத்துப் பகுதிகளை சீரமைத்தல், சாலை வழித்தட அடிப்படையிலான பாதுகாப்பு மேம்பாடுகள், சாலைப் பாதுகாப்புத் தணிக்கைகளை வலுப்படுத்துதல், தொழில்நுட்ப அடிப்படையிலான கண்காணிப்பு, அவசரகால மீட்பு அமைப்புகளை மேம்படுத்துதல் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளின்

ஒருங்கிணைந்த செயல்பாட்டின் மூலம் ஆதாரப்பூர்வமான திட்டமிடலை மேற்கொள்ளுதல் ஆகியவற்றிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சாலைப் பயனாளர்கள் அனைவருக்கும் பாதுகாப்பான சாலைச் சூழலை உருவாக்கும் நோக்கத்துடன், தொழில்நுட்பத் தேவைகள், விபத்துத் தரவுகள், சாலை வலையமைப்பின் தன்மைகள் மற்றும் வளங்களின் இருப்பு ஆகியவற்றின் அடிப்படையில் சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் படிப்படியாகச் செயல்படுத்தப்படும்.

பாதுகாப்பு நடவடிக்கைகளின் தாக்கத்தை மதிப்பிடவும் மற்றும் கூடுதல் நடவடிக்கைகள் தேவைப்படும் பகுதிகளைக் கண்டறிவதற்காக, விபத்து போக்குகள், உயிரிழப்பு முறைகள் மற்றும் கள ஆய்வுகள் ஆகியவற்றின் அடிப்படையில் சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளின் செயல்திறன் அவ்வப்போது மதிப்பீடு செய்யப்படும். இத்தகைய

மதிப்பீடுகளின் முடிவுகள், சாலைப் பாதுகாப்பு உத்திகளை மேம்படுத்தவும், எதிர்கால முதலீடுகளுக்கு முன்னுரிமை அளிக்கவும் மற்றும் ஆதார அடிப்படையில் முடிவெடுக்கும் முறையை வலுப்படுத்தவும் பயன்படுத்தப்படும். அத்தகைய ஆய்வுகளின் முடிவுகள், எதிர்கால நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிப்பதற்கும் மற்றும் கிடைக்கக்கூடிய வளங்களை திறம்பட உபயோகிக்கவும் பயன்படுத்தப்படும்.

## 3.2 சாலைப் பராமரிப்பு

நன்கு பராமரிக்கப்படும் சாலைக் கட்டமைப்பானது, பாதுகாப்பான, திறனான (ம) நம்பகமான போக்குவரத்தை உறுதி செய்வதற்கும், பொது முதலீட்டைப் பாதுகாப்பதற்கும் மற்றும் சாலை உள்கட்டமைப்பின் பயன்பாட்டுக் காலத்தை நீட்டிப்பதற்கும் அவசியமாகிறது. உரிய காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள், அறிவியல் பூர்வமான திட்டமிடல் மற்றும் தகுந்த பராமரிப்பு

நடைமுறைகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றின் மூலம் மாநில சாலை வலையமைப்பை முறையாகப் பராமரிப்பதற்கு அரசு தொடர்ந்து முன்னுரிமை அளிக்கும்.

சாலைகளின் நிலை, போக்குவரத்துப் பண்புகள், கள ஆய்வுகள் மற்றும் பிற தொடர்புடைய தகவல்களின் அடிப்படையில், பராமரிப்புத் திட்டமிடுதலைத் துறை படிப்படியாக வலுப்படுத்தும். சாலைச் சொத்துகளைப் பாதுகாப்பதற்கும் மற்றும் சிதைவடைவதைக் குறைப்பதற்கும், முன்கூட்டிய பராமரிப்பு, உரிய நேரத்தில் புதுப்பித்தல் மற்றும் தகுந்த பராமரிப்பு உத்திகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும்.

பராமரிப்புத் தேவைகளை முன்கூட்டியே கண்டறிவதற்கும் மற்றும் குறைபாடுகளை உரிய நேரத்தில் சரிசெய்வதற்கும் வசதியாக, வழக்கமான கள ஆய்வுகளுடன் தொழில்நுட்ப அடிப்படையில்

கண்காணிப்பும் மற்றும் பொதுமக்களின் பங்களிப்பும் படிப்படியாக ஒருங்கிணைக்கப்படும். சாலை வலையமைப்பின் பயன்பாட்டுத் திறனை மேம்படுத்துவதற்கும் மற்றும் ஆயுட்காலச் செலவைக் குறைப்பதற்கும் பராமரிப்புச் செயல்திறன் குறிப்பிட்ட கால இடைவெளியில் மதிப்பாய்வு செய்யப்படும்.

## 3.3 சாலை, பாலம் மற்றும் நிலச் சொத்து மேலாண்மை

சாலைகள், பாலங்கள் மற்றும் நெடுஞ்சாலை நிலம் ஆகியவற்றின் இருப்பிடம், நிலை, செயல்பாடு மற்றும் பராமரிப்பு வரலாறு குறித்த நம்பகமான தகவல்கள், உள்கட்டமைப்பு சொத்துகளைச் சிறப்பாக நிர்வகிப்பதற்குத் தேவைப்படுகிறது. அறிவியல் பூர்வமான திட்டமிடல் மற்றும் முதலீட்டு முடிவுகளுக்கு ஆதரவளிக்கும் வகையில், முறையான தரவு சேகரிப்பு, மின்னணு சொத்துப் பதிவேடுகள் மற்றும் புவியியல் தகவல் அமைப்பு (GIS) அடிப்படையிலான பயன்பாடுகள் மூலம் சாலை, பாலம்

மற்றும் நிலச் சொத்து மேலாண்மையை இத்துறை படிப்படியாக வலுப்படுத்தும்.

காலமுறை நிலை மதிப்பீடு, ஆய்வு மற்றும் சொத்துத் தகவல்களைப் புதுப்பித்தல் ஆகியவற்றின் மூலம் சாலை மற்றும் பாலங்களின் விவரப் பட்டியல்கள் படிப்படியாக வலுப்படுத்தப்படும். இவ்வாறு உருவாக்கப்படும் தகவல்கள், நிலை அடிப்படையிலான பராமரிப்புத் திட்டமிடல், முதலீடுகளுக்கு முன்னுரிமை அளித்தல் மற்றும் உள்கட்டமைப்புச் சொத்துக்களை உரிய நேரத்தில் புனரமைத்தல் ஆகியவற்றிற்கு உதவும்.

நெடுஞ்சாலைத்துறை நிலப் பதிவேடுகளை மின்னணுமயமாக்குதல் மற்றும் புவியியல் தகவல் அமைப்பு அடிப்படையிலான வரைபடமாக்கல் ஆகியவற்றின் மூலம், நெடுஞ்சாலை நிலங்களின் நிர்வாகத்தை இத்துறை படிப்படியாக வலுப்படுத்தும். சாத்தியமான இடங்களில் பிற அரசு நிலத் தகவல்

அமைப்புகளுடன் இவற்றை ஒருங்கிணைப்பதன் மூலம், சொத்து பாதுகாப்பு, திட்ட முன்னேற்பாடு மற்றும் நெடுஞ்சாலை நிலங்களை திறமையாக நிர்வகித்தல் ஆகியவை மேம்படுத்தப்படும்.

## 3.4 தர உறுதி

சாலை உள்கட்டமைப்பின் தரம், நீடித்து உழைக்கும் தன்மை மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக, தர உறுதி அமைப்புகள், பயன்பாட்டு ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பத் திறன் ஆகியவற்றை இத்துறை வலுப்படுத்தும்.

மேம்படுத்தப்பட்ட கட்டுமானப் பொருட்கள், நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் சிறந்த பொறியியல் நடைமுறைகள் ஆகியவற்றின் பயன்பாட்டை ஊக்குவிக்கும் வகையில், சுயாதீன தர உறுதிப்பாடு, நவீன ஆய்வக வசதிகள் மற்றும் பயன்பாட்டு ஆராய்ச்சி ஆகியவை படிப்படியாக மேம்படுத்தப்படும்

## 3.5 மின்னணு நிர்வாகம்

அனைத்து செயல்பாட்டு நிலைகளிலும் திட்டமிடல், செயல்படுத்துதல், கண்காணித்தல் மற்றும் முடிவெடுத்தல் ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில் துறையின் மின்னணு நிர்வாக அமைப்புகள் வலுப்படுத்தப்படும். திறமையான திட்டக் கண்காணிப்பு, உள்கட்டமைப்பு மேலாண்மை மற்றும் சேவை வழங்கல் ஆகியவற்றை எளிதாக்குவதற்கு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் புவியியல் தகவல் அமைப்பு சார்ந்த செயலிகள் முழுமையாக பயன்படுத்தப்படும்.

திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல், நிலம் கையகப்படுத்துதல், பயன்பாட்டுச் சாதனங்களை மாற்றி அமைத்தல், தரத்தை உறுதி செய்தல் மற்றும் பிற முக்கியச் செயலாக்க நடவடிக்கைகள் ஆகியவற்றிற்கு மின்னணுத் தளங்கள் ஆதரவளிக்கும். இதன்மூலம், இடர்பாடுகளை உரிய நேரத்தில் கண்டறிந்து, அதற்கான முடிவுகளை எடுக்கவும் இயலும்.

தரவுகளின் நிலைத்தன்மையை மேம்படுத்தவும், தரவுப் பதிவுகள் மீண்டும் பதிவு செய்வதை குறைக்கவும் மற்றும் நிர்வாகத் திறனை அதிகரிக்கவும் தற்போதுள்ள மின்னணு அமைப்புகள் படிப்படியாக ஒருங்கிணைக்கப்படும்.

### 3.6 கொள்முதல் சீர்திருத்தங்கள்

உள்கட்டமைப்புத் திட்டங்களை குறைந்த செலவில், தரமாக, உரிய காலத்தில் செயல்படுத்தும் வகையில் வெளிப்படையான, கொள்முதல் நடைமுறைகளைத் துறை வலுப்படுத்தும். பங்கேற்பை எளிதாக்கவும், செயலாக்க நேரத்தைக் குறைக்கவும், வெளிப்படைத்தன்மையை அதிகரிக்கவும், முழுமையான மின்னணு அமைப்புகள் மூலம் கொள்முதல் நடைமுறைகள் உறுதிசெய்யப்படும்.

ஆரோக்கியமான போட்டியை ஊக்குவிக்கவும் மற்றும் உள்கட்டமைப்புத் திட்டங்களின் திறனான செயல்பாட்டை உறுதி செய்வதற்கும், ஒப்பந்தப்புள்ளி

ஆவணங்கள், தகுதித் தேவைகள் மற்றும் ஒப்பந்த நிபந்தனைகள் ஆகியவற்றில் தரப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## 3.7 நிறுவனத் திறன் மேம்பாடு

உள்கட்டமைப்புத் திட்டங்களை திறம்படச் செயல்படுத்துவதற்கு, நிறுவன மற்றும் தொழில்முறைத் திறன்களைத் தொடர்ந்து மேம்படுத்துவது அவசியம் என்பதை இத்துறை அங்கீகரிக்கிறது. எனவே, பொறியாளர்கள் மற்றும் பிற பணியாளர்களின் தொழில்நுட்பம், மேலாண்மை மற்றும் நிர்வாகத் திறன்களை மேம்படுத்துவதற்கான பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

## 3.8 உள்கட்டமைப்புத் திட்டமிடல்

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி, தொழில்துறை மேம்பாடு, நகரமயமாக்கல், தளவாடங்கள் மற்றும் பிராந்திய இணைப்பு

ஆகியவற்றை ஆதரிப்பதற்கு நீண்டகால உள்கட்டமைப்பைத் திட்டமிடுதல் இன்றியமையாததாகும். போக்குவரத்துத் தேவை, பொருளாதார வளர்ச்சி, நிலப் பயன்பாட்டு முறைகள் மற்றும் பெருகிவரும் போக்குவரத்துத் தேவைகள் ஆகியவற்றின் அடிப்படையில் எதிர்கால உள்கட்டமைப்புத் தேவைகளைக் கண்டறிவதற்கு, இத்துறை சிறந்த திட்டமிடல் அணுகுமுறையைப் பின்பற்றும். ஆய்வுகள் மற்றும் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் எதிர்கால உள்கட்டமைப்புத் திட்டங்களை அடையாளம் கண்டு அவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இதன் மூலம், மேற்கொள்ளப்படும் முதலீடுகள், தொழில்நுட்ப ரீதியாகச் சிறந்ததாகவும், பொருளாதார ரீதியாகச் சாத்தியமானதாகவும் மற்றும் நீண்டகால வளர்ச்சிக்கு உகந்ததாக இருப்பதும் உறுதி செய்யப்படும்.

## 3.9 திட்டங்களைச் செயல்படுத்துதல் மற்றும் துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பு

உள்கட்டமைப்புத் திட்டங்களை உரிய காலத்திற்குள் நிறைவேற்றுவதற்கு அரசுத் துறைகள், உள்ளாட்சி அமைப்புகள், சட்டப்பூர்வ அதிகார அமைப்புகள் மற்றும் பிற பங்களிப்பு நிறுவனங்களுக்கிடையேயான ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் தேவைப்படுகிறது. நிலம் கையகப்படுத்துதல், பயன்பாட்டுச் சாதனங்களை மாற்றி அமைத்தல், சட்டப்பூர்வ அனுமதிகள் மற்றும் பிற திட்டச் சார்புகள் ஆகியவைகளுடன் தொடர்புடைய சிக்கல்களை உரிய நேரத்தில் தீர்ப்பதற்காக, நிறுவனங்களுக்கிடையேயான ஒருங்கிணைப்பு, முன்கூட்டிய திட்டமிடல் மற்றும் காலமுறை கண்காணிப்பு ஆகியவற்றை துறை வலுப்படுத்தும்.

திட்டங்களை உரிய காலத்தில் முடிப்பதற்கும், செயலாக்கத் தாமதங்களைக் குறைப்பதற்கும் மற்றும்

ஒட்டுமொத்த திட்டச் செயல்பாட்டை மேம்படுத்துவதற்கும் கட்டமைக்கப்பட்ட மறுஆய்வு வழிமுறைகளும் மற்றும் ஒருங்கிணைந்த முடிவெடுத்தலும் மேற்கொள்ளப்படும்.

மேற்கூறிய அனைத்து சிறப்பு அம்சங்ளைக் கருத்தில் கொண்டு, அறிவுப் பகிர்வு, வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களைப் பின்பற்றுதல் மற்றும் உள்கட்டமைப்புகளைத் திட்டமிடல், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு தொடர்பான சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்துகொள்ளும் வகையில், கல்வி நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் தொழில்முறை அமைப்புகளுடன் கூட்டாண்மை ஊக்குவிக்கப்படும். நிறுவனத் திறனை வலுப்படுத்துவது துறையின் நிர்வாகச் சீர்திருத்தங்களின் ஒரு அங்கமாக தொடர்ந்து இருக்கும்.

### 3.10 கடல்சார் நிர்வாகம்

ஒருங்கிணைந்த திட்டமிடல், திறன்மிக்க துறைமுக நிர்வாகம் மற்றும் பயணிகள் (ம) சரக்கு சேவைகளை நவீனமயமாக்கல் ஆகியவற்றின் மூலம் அரசு, கடல்சார் நிர்வாகத்தைத் தொடர்ந்து வலுப்படுத்தும். தொழில்நுட்ப, சுற்றுச்சூழல் மற்றும் வணிக அம்சங்களுக்கு இணங்க, கடல்சார் உள்கட்டமைப்பின் திறமையான பயன்பாட்டை ஊக்குவித்து, கடலோர இணைப்பை மேம்படுத்துவதற்கும் மற்றும் சிறு துறைமுகங்களின் நிலையான வளர்ச்சிக்கும் இத்துறை வழிவகுக்கும்.

செயல்பாட்டுத் திறன், பயணிகளின் வசதி மற்றும் சேவை வழங்குதல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக, மின்னணு தொழில்நுட்பங்களும் மற்றும் நவீன மேலாண்மை நடைமுறைகளும் படிப்படியாகச் செயல்படுத்தப்படும். வர்த்தகம், சுற்றுலா மற்றும் பிராந்திய பொருளாதார வளர்ச்சியை ஆதரிக்கும் வகையில் கடல்சார்

உள்கட்டமைப்பின் படிப்படியான வளர்ச்சிக்கு நீண்டகாலத் திட்டமிடுதல் வழிகாட்டும்.

## 4. எதிர்காலச் செயல்திட்டம்

பொருளாதார வளர்ச்சி, பிராந்திய இணைப்பு மற்றும் மேம்பட்ட வாழ்க்கைத் தரம் ஆகியவற்றை உருவாக்கும் வகையில் பாதுகாப்பான, சிறந்த (ம) நீடித்த சாலை மற்றும் கடல்சார் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதில் அரசு உறுதியாக உள்ளது. மேலே விவரிக்கப்பட்டுள்ள கொள்கை முன்னெடுப்புகள், நவீன தொழில்நுட்பத்தைப் பின்பற்றுதல், ஆதாரங்களின் அடிப்படையில் முடிவெடுத்தல் மற்றும் நிறுவன சீர்திருத்தங்கள் ஆகியவற்றின் மூலம் உள்கட்டமைப்பைத் திட்டமிடல், சொத்து மேலாண்மை, பராமரிப்பு, நிர்வாகம் மற்றும் சேவை வழங்கல் ஆகியவற்றை வலுப்படுத்த முயல்கிறது.

தமிழ்நாட்டிற்கு நெகிழ்திறன்மிக்க, திறமையான மற்றும் எதிர்காலத் தேவைகளுக்கு ஏற்ற போக்குவரத்து உள்கட்டமைப்பை உருவாக்கும் நோக்கத்துடன், தொழில்நுட்பச் சாத்தியக்கூறுகள், நிதிசார் விவேகம் மற்றும் மாநிலத்தின் வளர்ச்சிக்கான

முன்னுரிமைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இந்த முன்னெடுப்புகள் படிப்படியாகச் செயல்படுத்தப்படும்.

**ஆதவ் அர்ஜுனா**

**பொதுப்பணிகள் மற்றும் விளையாட்டு**

**மேம்பாட்டுத் துறை அமைச்சர்**

அரசு மைய அச்சகம், சென்னை – 600 001.




மாண்புமிகு பொதுப்பணிகள் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் அமைச்சராக பொறுப்பேற்றவுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை சந்தித்தார்.



மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 03.07.2026 அன்று நடைபெற்ற நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறையின் ஆய்வுக்கூட்டம்.




மாண்புமிகு பொதுப்பணிகள் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் 25.05.2026 அன்று சென்னை கிண்டியில் உள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டம்.



மாண்புமிகு பொதுப்பணிகள் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் 31.05.2026 அன்று கோயம்புத்தூர் மாவட்டத்தில் அவிநாசி உயர்மட்ட சாலைப்பணியினை மேற்பார்வையிட்டார்.




மாண்புமிகு பொதுப்பணிகள் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் 07.06.2026 அன்று கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நடைபெற்ற ஆய்வு கூட்டம்.



மாண்புமிகு பொதுப்பணிகள் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் 12.06.2026 அன்று திருவண்ணாமலை மாவட்டத்தில் நடைபெற்ற ஆய்வுகூட்டம்.




மாண்புமிகு பொதுப்பணிகள் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் 17.07.2026 அன்று திருவள்ளூர் மாவட்டத்தில் சென்னை எல்லைச்சாலை திட்டப்பணிகளை மேற்பார்வையிட்டார்.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.